[illegible]

மலர் 8 இதழ் 4

XIOV1935

1934-35

JL
R673 m 21, N28
N35.8.11.
187112

Registered No. M. 2330. "SIDDHANTHAM" Vol. 8—No. 11.

17 DEC 1935

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் ௮ | யுவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் 1935 ௵ நவம்பர்௴ | இதழ் ௧௧

உள்ளுறை பக்கம்


கல்லாடத்திலுள்ள திருவிளையாடற் பகுதிகள் ... ௪௩௩
பதிகத் தொகை ... ... ... ௪௪௩
தாயுமானவர் தத்துவ விளக்கம் ... ... ௪௪௪
திருநீற்றின் சிறப்பு ... ... ௪௫௨
ஆரூரர் அன்பு ... ... ... ௪௫௪
சித்தாந்த சாத்திரம் ... ... ௩௮௫ - ௪௧௫


ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. சிதம்பரநாத செட்டியார், B. A. (Hons.)

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

# சமாஜ ௩௰-ம் ஆண்டு நிறைவு விழா

இவ்விழா திருவண்ணாமலையில் 1935௵ டிசம்பர்௴ 29, 30, 31-ம் தேதிகளில் உயர்திரு - சுவாமி விபுலாநந்தர் அவர்கள் தலைமையில் நடைபெறும். திவான்பகதூர் - ஸ்ரீ. தெய்வசிகாமணி முதலியாரவர்கள்,(Joint Registrar of Co-operative Societies)விழாவைத் திறந்து வைப்பார்கள். சைவ இளைஞர் மகாநாடு திரு - G. கல்யாணம் பிள்ளையவர்கள், B.A., Dip. Ec. தலைமையில் கூடும். சைவ மங்கையர் மகாநாட்டுக்கு ஸ்ரீமதி பண்டிதை - இராஜேந்திர பத்மாசனியம்மையார் (கொழும்பு) தலைமைவகிப்பார்களென்றும், சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப்பதிப்பான அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ் முதலியவை அடங்கிய நூலைத் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் வெளியிட்டு ஆசீர்வதிப்பார்களென்றும் எதிர்பார்க்கிறோம். விவரமான நிகழ்ச்சிமுறை அடுத்த இதழில் வெளிவரும்.

---

## ஸ்ரீலஸ்ரீ ஞானியார்சுவாமிகள் சொற்பொழிவுகள்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் 1935௵ அக்டோபர்௴ 9௳ சென்னையில் எழும்பூரில் திரு. கோவிந்தராஜ முதலியாரவர்கள் மாளிகையில் சொற்பொழிவுகள் நிகழ்த்தத் தொடங்குமுன் நமது சமாஜத்தின் சார்பில், சமாஜக் காரியதரிசியும், சமாஜத்தலைவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களும், உதவித் தலைவர் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்களும், சமாஜத் தொண்டர் திரு. வே. தியாகராஜ முதலியாரவர்களும் சுவாமிகள் கல்வி, அறிவு, ஒழுக்கம், சொற்பொழிவுத் திறன், மக்களைச் சமய நெறியில் நிறுத்தும் ஆற்றல் முதலியவற்றைப் பாராட்டிச் சுவாமிகள் மீண்டும் விரைவில் சென்னைக்கு வரவேண்டுமென்று வேண்டிக்கொண்டு பிரிவு உபசாரம் நடத்தி வைத்தார்கள். சுவாமிகளும் திருவருள் கூட்டி வைத்தால் மீண்டும் சென்னைக்கு வருவதாக வாக்களித்துள்ளார்கள்.

சுவாமிகள் 11-10-35 காலையில் சென்னையிலிருந்து புறப்பட்டு அன்று மாலை திருமழிசையிலும், 12௳ ஸ்ரீபெரும்பூதூரிலும், 13-16-ம் தேதிகளில் கச்சியிலும், 17-19-ம் தேதிகளில் திருவோத்தூரிலும், 20௳ சத்யவிஜய நகரத்திலும், 21௳ ஆரணியிலும் 22௳ போளூரிலும், 23௳ திருவண்ணாமலையிலும், 24, 25-ல் திருக்கோவலூரிலும், 26௳ திருவெண்ணெய் நல்லூரிலும், 27௳ திருவதிகையிலும் தங்கிப் பலசொற்பொழிவுகள் நிகழ்த்தி 27௳ இரவு திருப்பாதிரிப்புலியூர் மடத்தையடைந்து 28௳ முதல் ஸ்கந்தர் ஷஷ்டி உத்ஸவத்தையும் 3-11-35-ல் திருக்கல்யாணத்தையும், உத்ஸவ நாட்களில் திருமடத்தில் கந்தபுராண உபந்யாஸங்களையும் சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

Registered No. M. 2330.

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "

| மலர் அ | யுவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் 1935௵ நவம்பர்௴ | இதழ் கக |
|---|---|---|

## கல்லாடத்திலுள்ள திருவிளையாடற் பகுதிகள்

[ஒவ்வொரு பகுதியி னீற்றிலும் பிறைக் குறிகளிற் கொடுக்கப் பட்டுள்ள எண்கள் கல்லாடத்துச் செய்யுளெண்களைக் குறிப்பன.]

(இதழ் அ. மலர் ௯. ௪00-ம் பக்கத்தொடர்ச்சி)

63. முழுதுற நிறைந்த பொருண்மன நிறுத்திமுன்
வேடந் துறவா விதியுடைச் சாக்கியன்
அருட்கரை காணா வனெனும் பெருங்கடல்
பலநாட் பெருகி யொருநா ளுடைந்து
கரைநிலை யின்றிக் கையகன் றிடலும்
எடுத்தடை கன்மலர் தொடுத்தவை சாத்திய
பேரொளி யிணையாக் கூடன் மாமணி. (67)

64. விண்குறித் தெழுந்து மேலவர்ப் புடைத்து
நான்முகற் றாங்குந் தேனுடைத் தாமரை
இதழுங் கொட்டையுஞ் சிதறக் குதர்ந்து

வானவ ரிறைவன் கடவுகார் பிடித்துப்
பஞ்செழப் பிழிந்து தண்புனல் பருகி
மைந்தெனப் பெயரிய நெடுமர மொடித்துக்
கண்ணுளத் தளவா வெள்ளுணா வுண்டு
பொரியெனத் தாரகைக் கணனுடல் குத்தி
அடுந்திற வினைய கொடுந்தொழில் பெருக்கிய
மாயா வரத்த பெருங்குரு கடித்து
வெண்சிறை முடித்த செஞ்சடைப் பெருமான். (68)

65. கைலையிற் றிருந்த கண்ணுதல் விண்ணவன்
நாடகக் கடவுள் கூட னாயகன். (69)

66. அமரர்கண் முனிக்கணத் தவைமுன் றவறு
புரிந்துட னுமைகண் புதைப்பமற் றுமையும்
ஆடகச் சயிலச் சேகரந் தொடர்ந்த
ஒற்றையம் பசுங்கழை யொல்கிய போல
உலகுயிர்க் குயிரெனுந் திருவுரு வணைந்து
வளைக்கரங் கொடுகண் புதைப்பவவ் வழியே
உலகிரு டுரக்குஞ் செஞ்சுடர் வெண்சுடர்
பிரமனுட் பட்ட நிலவுயி ரனைத்துந்
தமக்கெனக் காட்டு மொளிக்கண் கெடலு
மற்றவர் மயக்கங் கண்டவர் கண்பெறத்
திருநுதல் கிழித்த தனிவிழி நாயகன்
தாங்கிய கூடற் பெருநகர். (70)

67. புண்ணியங் குமிழ்த்த குன்றுடைக் கூடல்
நிறைந்துறை கறைமிடற் றறங்கெழு பெருமான். (71)

68. அருவியங் குன்றத் தணியணி கூடற்
கிறையவன் பிறையவன் கறைகெழு மிடற்றோன். (72)

69. பரங்குன் றுடுத்த பயன்கெழு கூடற்
பெருநகர் நி[illegible] சென்னியன்



மாலயன் றேடி மறையறிந் தறியாத்
தன்னுரு வொன்றி லருளுரு விருத்திய
ஆதி நாயகன் . . . (73)

10. குஞ்சரக் கோதையுங் குறமகட் பேதையும்
இருந்தன விருபுறத் தெந்தையென் னமுதம்
பிறந்தருள் குன்ற மொருங்குறப் பெற்ற
மாதவக் கூடல் மதிச்சடைக் காரணன். (74)

71. தாளஞ் சொரியும் பழனக் கூடற்
குவளைநின் றலர்ந்த மறையெழு குரலோன். (75)

72. பேழ்வாய்க் கொய்யுளை யரிசுமந் தெடுத்த
பன்மணி யாசனத் திருந்துசெவ் வானின்
நெடுஞ்சடைக் குறுஞ்சுடர் நீக்கியைந் தடுக்கிய
ஆறைஞ் ஞாற்றொடு வேறுநிரை யடுத்த
பன்மணி மிளிர்முடி பலர்தொழக் கவித்துப்
பஃறலைப் பாந்தட் சுமைதிருத் தோளில்
தரித்துல களிக்குந் திருத்தகு நாளில்
நெடுநாட் டிருவயிற் றருளுட னிருந்த
நெடுஞ்சடை யுக்கிரற் பயந்தரு ணிமலன்
மற்றவன் றன்னால் வடவையின் கொழுந்துசுட்
டாற்று துடலமு மிமைக்குறு முத்தமும்
விளர்த்துநின் றணங்கி வளைக்குல முழங்குங்
கருங்கடல் பொரிய வொருங்கு வேல்விடுத்
தவற்கருள் கொடுத்த முதற்பெரு நாயகன்
வெம்மையுந் தண்மையும் வினையுடற் காற்றும்
இருசுட ரொருசுடர் புணர்விழி யாக்கிமுன்
விதியவன் றூரா வுடலொடு நிலைத்த
முத்தமிழ்க் கூடல் முதல்வன் . (76)

73. முன்னிடைக் காடன் பின்னெழ நடந்து
நோன்புறு விரதியர் நுகரவுள் ளிருந்தென
நெஞ்சக நிறைந்து நினைவினுண் மறைந்து
புரையறு மன்பினர் விழிபெறத் தோற்றி
வானவர் நெடுமுடி மணித்தொகை திரட்டிப்
பதுக்கைசெய் யம்பலத் திருப்பெரும் பதியினும்
பிறவாப் பேரூர்ப் பழநக ரிடத்து
மகிழ்நடம் பேய்பெறும் வடவனக் காட்டினும்
அருமறை முடியினு மடியவ ருளத்தினுங்
குனித்தரு ணாயகன் குலமறை பயந்தோன்
அருந்தமிழ்க் கூடற் பெருந்தவர் காண
வெள்ளியம் பலத்துட் டுள்ளிய ஞான்று. (77)

74. . . மதிமுடி யந்தணன்
பொன்னணி மாடம் பொலிநகர்க் கூடல். (79)

75. . . உயர்நகர்க் கூடற்
கடுக்கையஞ் சடையினன் . . (80)

76. வாயினுங் கண்ணினு மனத்தினு மகலாப்
பேரொளி நாயகன் காரொளி மிடற்றோன்
மண்டிரு வேட்டுப் பஞ்சவற் பொருத
கிள்ளியுங் கிளையுங் கிளர்படை நான்குந்
திண்மையுஞ் செருக்குந் தேற்றமும் பொன்றிட
எரிவா யுரக ரிருணாட் டுருவக்
கொலைக்கொண் டாழி குறியுடன் படைத்து
மறியப் புதைத்த மறங்கெழு பெருமான். (81)

77. மணிவேற் குமரன் றிருவளர் குன்றம்
பேரணி யுடுத்த பெருநகர்க் கூடல்
கோயில்கொண் டிருந்த குணப்பெருங் குன்றம். (82)



78. வெள்ளியங் குன்றம் விளங்கவீற் றிருந்த
முன்னவன் கூடல் . . (83)

79. அருட்பரங் குன்ற முடுத்தணி கூடற்
குறும்பிறை முடித்த நெடுஞ்சடை யொருத்தனை. (84)

80. பெருந்திருக் கூட லருந்தவர் பெருமான். (85)

81. முகனைந்து மணத்த முழவந் துவைக்க
ஒருகாற் றூக்கி நிலையமொளிர் வித்து
மூவுட லணைத்த மும்முகத் தொரோமுகத்
தெண்கடிப்பு விசித்த கல்லல் செறிய
இருட்குற ளூன்றியெம் மருட்களி யாற்றி
உருள்வாய்க் கொக்கரை யும்பர்நாட் டொலிக்கக்
கரங்கால் காட்டித் தலையு மியக்கி
இதழ்விழ் தாமரை யெனுந்தகு ணித்தந்
துவைப்பநின் றமைகரத்துக் கவைக டோற்றிக்
கரிக்கா லன்ன மொந்தைகலித் திரங்கத்
துடியெறிந் திசைப்பத் துகளம் பரப்பி
வள்ளம் பிணைத்தசெங் காடிகை மல்க
எரியக லேந்திவெம் புயங்கமிசை யாக்கி
எரிதளிர்த் தன்ன வேணியிற் குழவிப்
பசும்பிறை யமுதொடு நிரம்பிய தென்ன
மதுக்குளிர் மத்தமு மிலைத்தொரு மறுபிறை
மார்பமு மிருத்திய தென்னக் கூன்புறத்
தேனக் கோடுவெண் பொடிப்புலத் தொளிரப்
பொலன்மிளிர் மன்றப் பொதுவக நாடித்
தனிக்கொடி காணவெவ் விடத்துயிர் தழைப்ப
ஆடிய பெருமா னமர்ந்துநிறை கூடல். (86)

82. நான்மறை புகழுங் கூடலம் பெருமான். (87)

83. நேமியங் குன்றகழ் நெடுவேற் காளையன்
தன்பரங் குன்றந் தமர்பெறு கூடற்
றிறையோன் . . . (88)

84. ஒருநடங் குலவிய திருவடி யுரவோன்
கூடலம் பதி . . (89)

85. கூரரி வாளின் தோகையஞ் சேவற்
கொடியோன் குன்றம் புடைவளர் கூடற்
கணிச்சியங் கைத்தலத் தருட்பெருங் காரணன்
உலகுயிர் மகவுடைப் பசுங்கொடிக் கொருபாற்
பகுத்துயிர்க் கின்பந் தொகுத்தமெய்த் துறவினன். (90)

86. கூடற் றிறையவன் காலற் காய்ந்தோன்
திருநடம் . . . (91)

87. சேயோன் குன்றகத் திருப்பெறு கூடற்
கொழுஞ்சுடர் கிளைத்த நெடுஞ்சடைப் புயங்கள். (92)

88. தமிழ்க்கலை மாலை சூடித் தாவாப்
புகழ்க்கலை யுடுத்துப் புண்ணியக் கணவன்
பன்னெறி வளனிறப் பூட்சியிற் புல்லுந்
தொன்னிலைக் கூடற் றுடியிடை யகத்தனை. (93)

89. . . திருமா மிடற்றோன்
பாடல் சான்ற தெய்வக்
கூடல் . . . (94)

90. மறையடி வழுத்திய மறைவனத் தொருநாள்
மணிச்சுடர் நறுநெய் கவர்மதிக் கருப்பைக்
கிருவகை யேழெனுந் திருவுல களைத்துங்
கொடுத்தவன் கூடல் வழுத்தினர் போல. (95)



91. . . அரக்கனுயிர் வெளவி
இலங்கையவ் வரக்கற் கிளையோன் பெறுகெனத்
தமதூர் புகுந்து முடிசுமந் தோர்க்கு
நான்முகத் தவர்க்கு மிருபாற் பகுத்த
ஒருநுதற் கண்ணவ னுறைதரு கூடல். (96)

92. கூடற் பதிவரு மாடற் பரியோன்
எட்டெட் டியற்றிய கட்டமர் சடையோன். (97)

93. கூடற் பதிவருங் குணப்பெருங் குன்றினன். (98)

94. கதிர்நிரை பரப்பு மணிமுடித் தேவர்கள்
கனவிலுங் காணாப் புனைவருந் திருவடி
மாநிலந் தோய்ந்தோர் வணிக னாகி
யெழுகதிர் விரிக்குந் திருமணி யெடுத்து
வரையாக் கற்புட னான்கெனப் பெயர்பெற்
றுங்காங் காயிர கோடி சாகைகண்
மிடலொடு விரித்துச் சருக்கம் பாழி
வியா விந்தம் பதநிரை நாத
மறைப்புப் புள்ளி மந்திர மொடுக்கமென்
றினையவை விரித்துப் பலபொருள் கூறும்
வேத முளைத்த வேதமில் வாக்காற்
குடுமிச் சேகரச் சமனொளி சூழ்ந்த
நிறைதரு நான்கி னிகழ்ந்தன குறியுங்
குருவிந் தஞ்சௌ கந்திகோ வாங்கு
சாதுரங் கமெனுஞ் சாதிக னான்குந்
தேய்க்கி னெருப்பிற் சேர்க்கினங் கையிற்
றாக்கிற் றகட்டிற் சுடர்வாய் வெயிலிற்
குச்சையின் மத்தகக் குறியினோ ரத்தின்
நெய்த்துப் பார்வையி னேர்ந்து சிவந்தாங்
கொத்த நற்குண முடையபன் னிரண்டுங்

கருகிநொய் தாதல் கீற்று வெருளி
திருகன் முரணை செம்ம ணிறுகன்
மத்தகக் குழிவு தராச மிலைச்சுமி
வெச்சம் பொரிவு புகைதல் புடாயஞ்
சந்தைநெய்ப் பிலியெனத் தருபதி னாறு
முந்திய நூலின் மொழிந்தன குற்றமுஞ்
சாதகப் புட்கண் டாமரை கழுநீர்
கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு
வன்னி மாதுளம் பூவிதை யென்னப்
பன்னுசா துரங்க வொளிக்குணம் பத்துஞ்
செம்பஞ் சரத்தந் திலக முலோத்திர
முயலின் சோரி சிந்துரங் குன்றி
கவிரல ரென்னக் கவர்நிற மெட்டுங்
குருவிந் தத்திற் குறித்தன நிறமும்
அசோகப் பல்லவ மலரிசெம் பஞ்சு
கோகிலக் கண்ணீ ளிலவலர் செம்பெனத்
தருசௌ கந்தி தன்னிற மாறுஞ்
செங்கல் குராமலர் மஞ்சள் கோவை
குங்கும மஞ்சிற் கோவாங்கு நிறமுந்
திட்டை யேறி சிவந்த விதாயம்
ஒக்கல் புற்றுங் குருதி தொழுதினை
மணிகோ கனகங் கற்பம் பாடி
மாங்கிச கந்தி வளர்காஞ் சுண்டையென்
றுங்கொரு பதின்மூன் றடைந்த குற்றமும்
இவையெனக் கூறிய நிறையருட் கடவுள். (99)

95. வடவனத் தொருநாண் மாறுபட் டெதிர்ந்து
வழிநடந் தனது மரக்கா லன்றி
முதற்றொழிற் பதுமன் முன்னு வவ்வுழி



மான்றலைக் கரத்தினிற் கூட்டினை வயக்கித்
தூக்கல் வளையுடன் றொடர்ப்பத மெறிந்து
மற்றதன் றுளம் புத்திரி யாக
நிமிர்த்தெறி காலிற் கடைக்கண் கிடத்திப்
பாணியிற் சிரம்பதித் தொருநடை பதித்துக்
கொடுகொட் டிக்குக் குறியடுத் தெடுக்கும்
புங்கவம் வாரம் புடைநிலை பொறுத்துச்
சச்ச புடத்திற் றனியெழு மாத்திரை
ஒன்றைவிட் டொருசீ ரிரண்டுற வுறுத்தி
எடுத்துத் துள்ளிய வினமுத் திரைக்கு
மங்கலப் பாணி மாத்திரை நான்குடன்
சென்றெறிந் தொடுங்குந் துறுமிடை திருத்தி
ஞெள்ளலிற் குனித்த விருமாத் திரைக்குப்
பட்டடை யெடுக்கப் புலிதம் பரப்பிப்
புறக்கான் மடித்துக் குவித்தெறி நிலையம்
பதினுன் கமைத்து விடுமாத் திரைக்கு
வனமும் பிதாவும் பாணியில் வகுத்து
வட்டங் கொடுக்கு மிந்திரை பணிக்கு
மாத்திரை யாறுடன் கும்பம் பதித்து
வலவை யிடாகினி மண்ணிருந் தெடுத்த
காலுடன் சுழல வாடிய காளி
நாணிநின் றொடுங்கத் தானுமோர் நாடகம்
பாண்டரங் கத்தொரு பாடுபெற் றமைந்த
மோகப் புயங்க முறைத்துறை தூக்கி
அதற்குச் சாரணி யருட்கர மொன்றிற்
பாணி யிரண்டுந் தாள மாக்கி
ஒருதாள் மிதித்து விண்ணுற விட்ட
மறுதாள் மலரின் மலர்க்கரந் துடக்கிப்
பார்ப்பதிப் பாணியைத் துடிமணி யெடுப்பச்

சுருதியைத் தண்டி வலிகொண் டமைப்ப
முதலே ழுதனை யொன்றினுக் கேழென
வீணை பதித்துத் தானந் தெரிக்க
முற்றுடி மணியி லொற்றிய பாணியை
நாதங் கூட்டி மாத்திரை யறுத்து
மாங்கனி யிரண்டி லாங்கனி யொன்றால்
முன்னொரு நாளின் முழுக்கதி யடைந்த
வம்மைப் பெயர்பெறு மருட்பேய் குனிப்பப்
பூதமுங் கூளியும் பேயும் நடிப்ப
அமரர்கள் களிப்ப வாடிய பெருமான். (100)

96. முதுநகர்க் கூடலுள் மூவாத் தனிமுதல்
ஏழிசை முதலி லாயிரங் கிளைத்த
கானங் காட்டும் புள்ளடித் துணையினர்
பட்டடை யெடுத்துப் பாலையிற் கொளுவிக்
கிளையிற் காட்டி யைம்முறை கிளத்திக்
குரலும் பாணியு நெய்தலிற் குமட்டி
விளரி யெடுத்து மத்திமை விலக்கி
ஒற்றைத் தாரி யொருநரம் பிரட்ட
விழுந்து மெழுந்துஞ் செவ்வழி சேர்த்திக்
குருவிவிண் ணிசைக்கு மந்தரக் குலிதம்
புறப்படு பொதுவுடன் முல்லையிற் கூட்டி
விரிந்தவுங் குவிந்தவும் விளரியில் வைத்துத்
தூங்கலு மசைத்தலுந் துள்ளலு மொலித்தலும்
ஆங்கவை நான்கு மணியுழை யாக்கிப்
பூரகங் கும்பகம் புடையெழு விளரி
துத்தந் தாரங் கைக்கிளை யதனுக்
கொன்றினுக் கேழு நின்றுநனி விரித்துத்
தனிமுக மலர்ந்து தம்மிசை பாடக்
கூளியுந் துள்ள வாடிய நாயகன். (101)

## ஆதியில் மூவர் பாடிய பதிகத் தொகை

தோடுடைய செவியன்முதற் கல்லூ ருகச்
சொற்பதி னாயிரமாந் தோணிபுரத் தரசு
நாடுடை கூற்றாகி யெண்ணுகே னந்த
நாற்பத்தொன் பதினாயி ரந்நாவுக் கரசு
மூடுடைய பித்தாவென் றடிநொடித்தா னந்த
முப்பத்தே ழாயிரமா மொழிநாவ லரசர்
ஏடுடைய திருப்பதிக மிலக்கத்தீ ராயிர
மியம்பியருள் பெற்றிறைவ னடிசேர்ந்தா ரிவரே.

## இப்போதிருக்கும் பதிகத் தொகை

தொகுத்தவொரு மூவர்களு மருளிச் செய்த
சொற்பதிக மெழுநூற்றுத் தொண்ணூற் றேழு
பகுத்ததமிழ் விரகனுமை பாலுண்ட பெருமான்
பகர்பதிக முந்நூற்றெண் பத்துநான் காகும்
வகுத்ததிரு மறைக்காடு திறக்கப் பாடும்
வாகீசர் முந்நூற்றுப் பன்னி ரண்டாம்
மிகுத்ததிரு நாவலூர் வன்றொண்டப் பெருமான்
வியன்பதிக நூற்றொன்றும் விளம்புங் காலே.

திருஞான சம்பந்த ரருளிச் செய்த
திருப்பதிகம் பொதுவகையா லோரேழ தாகும்
அருணாவுக் கரையர்பிரான் முப்பத்தே ழாகு
மாரூர நம்பியொரு நான்காகு மாக
வருஞானப் பொதுப்பதிக நாற்பத்தெட் டாகு
மற்றுமிந்தப் பதிகமொடு மறைதேரு மூவ
ரிருநாவின் மொழிந்ததிருப் பதிகம் யாவு
மெண்ணியிடி லெழுநூற்றுத் தொண்ணூற் றேழே.

---

இம்மூன்று செய்யுட்களும் ஓர் ஏட்டுப் பிரதியிற் காணப்பட்டன.

# தாயுமானவர் தத்துவ விளக்கம்

[அ. மு. வரதநஞ்சைய பிள்ளை.]

(மலர் ௮. இதழ் ௧௦. ௪௧௭-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, வேதாந்தத்துக் கூறும் பொருளும், சைவ சித்தாந்தத்துச் சாற்றப் பெறும் பொருளும் தம்முண்முரணுதலின், வேதத்தை இகழும் ஆகமிகளும், ஆகமங்களைப் புறம்பழிக்கும் வைதிகரும் தம்மின் மலைந்து மாறுபடுதல் காண்குமன்றே. ஏகான்மவாதிகள் கேவலாத் வைதிகளாகவும், சைவ சித்தாந்திகள் சுத்தாத் வைதிகளாகவும் கூறப்படுவர். நீலகண்ட சிவாசாரியர் நீலகண்ட பாடியத்திற் பதியதிகரணத்தில் "சிவாகமங்களில் ஒரு சாரன பரப்பிரமம் கேவலம் நிமித்த காரணமெனக் கூறும். அதனை மறுத்தற்கெழுந்தது இவ்வதிகரணம் என்றுரைப்பாருமுளர். அது பொருந்தாது. யாம் வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் வேற்றுமை கண்டிலம்; சிவனாற் செய்யப்படுதலின் வேதமும் சிவாகமம் என வழங்கப்படும். ஆதலாற் சிவாகமம் மூன்று வருணத்துக்கே உரித்தாயதும், நான்கு வருணத்துக்கே உரித்தாயதும் என இருவகைப்படும்; அவற்றுள் முன்னையது வேதம் எனவும், பின்னையது சிவாகமம் எனவும் வழங்கப்பட்டன. இவ்விரண்டுஞ் செய்த கருத்தன் ஒருவனேயாம். "..........இவ்வதிகரணம் கேவலம் நிமித்த மாத்திரமே இறைவன் எனக் கூறும் இரணிய கருப்ப நூலாகிய யோக சாத்திரத்தை மறுத்தற்கு எழுந்ததெனவே யாம் கூறுதும்" என்றெடுத் தோதியவாற்றான், முன் நாம் காட்டியவாறு வேதாந்த சித்தாந்தங்கள் தம்முட் பொருந்தாவாறு காட்டி மேற்போக்காக நோக்குவாரை மயக்குமாறு காண்க. சித்தியாரிலும்

"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூற்கள்
வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூற்கள்



ஆதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினா லுலகர்க்குஞ் சத்திநி பாதர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்"

என வேதாந்த சித்தாந்தங்களின் ஒற்றுமை வேற்றுமை நயங்கள் உள்ளவாறுணர்த்தப்பட்டன. பெரிய புராணத்தில் அருண்மொழித் தேவ நாயனாரும்,

"உலகியல் வேதநூல் ஒழுக்க மென்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்......"

என்றிப் பொருளையே சுருக்கி எளிதினியம்புவா ராயினார்.

திராவிட மாபாடிய கர்த்தராம் (எம்முள்ளக் கோயிலுவந்த) பெருமானாரும், மாபாடியம் சிறப்புப் பாயிரத்தில் "சைவரில் ஒரு சாரார், சைவாகமங்களில் "உலக நூல், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரம்" என நூற்களை ஐவகைப்படுத்து, "மாந்திரம் ஒழிந்த நான்கும் புறநூல்" என வைதிகத்தினையும் அவற்றொடு விலக்குதலானும் "வேதாந்தத்தில் ஏகனே யான்மா" என வேதாந்தத்தைப் புறச் சமயங்களோடு எடுத்தோதி மறுத்தலானும், 'வேதம் பிரமாணமன்று என்பர். அது பகுத்துணர்வில்லாதார் கூற்றேயாம் என மறுக்க. என்னை ? ஆண்டு வைதிகம் என்றது மீமாம்சை நூலும் வைசேடிக நூலும் நையாயிக நூலும் என்னும் மூன்றுமேயாம் எனவும், புறச்சமயங்களோடு வைத்தெண்ணிய வேதாந்தமாவது ஏகான்மவாதங் கூறும் வியாச நூல் எனவும் சித்தாந்தப் பிரகாசிகையில் சர்வான்ம சம்பு சிவாசாரியர் கூறுதலான், அது வேறென்பது தெற்றென விளங்குமாகலின், ஆண்டு வேதம் என்றதூஉம் மீமாம்சை நூலை எனக்கொள்க. வேதத்துள் விதித்த கரும காண்டத்தை

ஆராய்ச்சி செய்தலின் அதற்கும் அப்பெயராயிற்று........... வேதாந்தம் என்பது யோக (காரண)ப் பெயரான் வேதத்தின் முடிபாகிய உபநிடதங்களைக் கூறும். உரூடி (இடுகுறி)ப் பெயரான் அவற்றை எடுத்து (வியாசன்) செய்த ஏகான்மவாத நூலைக் கூறும். ஆதலின் அவ்விருவேறு வகையுந்தெரிந்துணர்ந்து கொள்க'' என மிக விரிவாய்த் தெளிவுற விளக்கிப் போந்தனர்.

உண்மைப் பொருள், அறிந்தோர் பலர் கூற்றினும் மாறுபடாது வருமன்றே. திருமூல நாயனார் இக்கருத்தை ஐயமற விளக்கி,

"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாத னுரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே''

எனத் துணிவுறுத்தினர். பின்னும் அவர் "தானான வேதாந்தந் தானென்னுஞ் சித்தாந்தம்........'' என்று அவற்றின் நுணுகிய வேற்றுமையையுஞ் சுட்டிப் போந்தனர்.

"ஒரும் வேதாந்த மென்றுச்சியிற் பழுத்த - ஆரா இன்ப அருங்கனி பிழிந்த - சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனமு தருந்தினர் சிலரே....'' என வேதத்தை ஒருபெரிய சிறந்த மரமாகவும், அதன் வழித் தோன்றிய பல்வகைச் சமயங்களையும் இலை, தளிர், காய், பூவாகவும் உருவகித்து, வேதாந்தத்தைக் கனி யென்று சிறப்பித்து, அக்கனிதானும் தோல், கொட்டை, அகக்கோது முதலிய பயனில் பொருட்களையுமுடையதாகலின் அதனைப் பிழிந்து வடித்தெடுத்துப் பருகற்கினிய பாங்கின் அமைத்தாலொத்தது, சைவசித்தாந்தம்: என விளக்கிய குமரகுருபரனார் கூற்றும் ஈண்டு நோக்கத்தக்கது. இங்ஙனம், சிவாநுபூதிமான்கள் செப்பிய அரும்பெறலுண்மைகளைக் கருத்திற்பதித்த நமதுஅடிகள் (தாயுமா



னார்) "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே'' எனச் சித்தர்குழாத்தை உள்ளமுருகித் துதித்துப் பராவுகின்றனர். வேதாந்தத்தோடு சித்தாந்தம் (சமரசம்) ஒரு தன்மையாதல் யாங்ஙனமென வினவுவார்க்குத் தமது கருத்தை, முன்னோர் மொழிந்ததினும் வலியுறும் வண்ணம் கூறிச் சித்தாந்தத்தின் சிறப்புணர்த்தி, அதனோடமையாது, அந்நிலையினிற்றற்கேற்ற வழிகளையும், இடைப்புக்குத் தடுக்கும் தடைகளையும், அத்தடைகளை நீக்கிக் குறித்த பொருளை அடைந்து இன்பமெய்தும் விரகை (உபாயத்தை)யும் எளிதாகவும் சுருக்கமாகவும் இனிய நடையில் எடுத்தியம்புகின்றார். அப்பொன்போற் போற்றற்குரிய செய்யுளைக் காண்மின் !

"சந்ததமு மெனதுசெயல் நினதுசெயல் யானெனுந்
தன்மைநினை யன்றி யில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவ மிதுவே !
இந்தநிலை தெளியநான் நெக்குருகி வாடிய
வியற்கைதிரு வுளம றியுமே ;
இந்நிலையி லேசற் றிருக்கவென் றான்மடமை
யிதசத்ரு வாக வந்து
சிந்தைகுடி கொள்ளுதே ; மலமாயை கன்மந்
திரும்புமோ ? தொடுவ ழக்காய்ச்
சென்மம்வரு மோ?வெனவும் யோசிக்கு தேமனஞ்
சிரத்தையெனும் வாளு முதவிப்
பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந் தந்தெனைப்
பாதுகாத் தருள்பு ரிகுவாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்த மே''

இதனுட் போந்த பொருளை விரித்து நோக்குவாம். வேதத்தின் முடிபாம் உபநிடதங்கள், "அது நீயாகின்றாய்''

"அதுவானேன்" "அது நான்" எனும் பொருள்படக் கூறும் தத்துவமசி முதலிய மகா வாக்கியங்களின் பொருளோடு, "ஏகன் அநேகன்" எனப் பதியையும் பசுவையும் வேறுபடுத்துக் கூறும் சித்தாந்தம் முரணுவது போலத் தோன்றினும் அங்ஙனம் முரணுதல் சிறிதும் இன்று. காரணம் யாதெனின் யான் என்றும் எனதென்றும் கூறப்படும் அகங்காரமும் மமகாரமும் எவ்வகையான் எய்திற்றெனலை நுனித்து நோக்கின், அநாதியில், செம்பிற்களிம்புபோல் இயற்கையிற் றோற்றி பிணித்துள்ள ஆணவமலத்தால் அறிவு மறைப்புண்டுகிடந்த உயிர்கட்கு, முதல்வனே ! நீ மாயாமலத்தால் உடல், கருவி, முதலாயின தந்துதவி, அறிவைச் சிறிது விளக்கினமையானன்றே அவ்வுயிர்கள் தம்மை (மெய்யுற வுணராவிடினும்) தாங்கி நிற்கும் உடலையேனும் "யான்" என்று அறிவனவும் அவ்வுடல், கருவி முதலியவற்றைப் பெற்றவைகளை "எனது" என அபிமானிப்பவுமாயின. ஆகவே, யான், "எனது" என்று உயிர்கள் முதன்மை ஏற்பது முற்றும், நினது பேரருட் செயலேயன்றி வேறில்லையாதலின் *அபேதமாக "அது" (பதி) "நீ" (உயிர்) (உயிரேசிவம்) என வேதாந்தங்கள் துணிந்துரைப்பனவாயின : யானென்றெண்ணும் கருத்தும், எனதென மதிக்கும் பிறபொருட்களும், நின்னுடைமையாதலானும், எமது மாபெருந் தலைவனாகிய நினக்கு, உயிர்க்குலங்களாகிய யாங்கள், உடைமைப்பொருட்களாதலாலும், உடைமையோடு, உடையானாகிய நீ பிரித்தறிய வாராது ஒன்றாய்க்

---

*அபேதம் = பேதமின்மை : தம்மின் மனமுறநட் டோர் (அவர்) பெயரைத் தமது பெயராகக் கூறிக் கோடலும் வழக்கம்......" தன் பெயர் கிளக்குங்காலை யென் பெயர் - பேதைச் சோழன் என்னுஞ் சிறந்த - காதற்கிழமையுமுடையன்..." எனப் பிசிராந்தையார், தன் உயிர் நட்புடைய சோழன் பெயரைத் தன் பெயராகக் கூறிக் கொள்வார், என்பதும் காண்க. (புறம் - ௨௧௫).



கலந்து நிற்கும் நிலையானும், பெத்தநிலை (கட்டுற்றநிலை)யில் வேறாயினவேனும், முத்திநிலையில் (அணைந்தின்புறும் நிலை) யானென்னு முணர்விறந்து (தற்போதங்கெட்டு) கூடலானும், இங்ஙனம் முன்(கேவலநிலையி)னும் பின் (சுத்தநிலையி)னும் அறிவற நிற்றற்குரியேம். இடைநிலை (சகலநிலை)யில் எம்மை வேறாகக் கூறுதல் நாணுத்தக (வெட்கம்மிக) வுடைத்தாகலானும், அவ்வேதாந்தங்கள், உண்மையறிந்து கூறியவை, சித்தாந்தத்தின் திரண்ட அரும்பொருளே யாதல் பற்றி, எனக்கு அவற்றிடை ஒரு சிறிதும் வேற்றுமையின்றென நன்கு விளங்கிற்று. விளக்கமாக இவ்வுண்மையை அறிதற்குப் பல நூற்களைப் பன்முறை கற்றும், கற்றாய்ந்தோரிடத்து உசாவியும், ஞானநுபவமுடையோர் முன் ஏக்கமுற்று நின்று தொண்டுபுரிந்தும், யான் பெரிதும் வாடி வருந்தியதும் என்னுள்ளத்தொளியாய் நிற்கும் நீ யறியாததன்றே ; ஈதன்றே வேதாந்தசித்தாந்த சமரசநிலையாவது! அம்ம! இவ்வுண்மையையறிந்தது, அவ்வழியடைந்து ஆராஇன்பந்துய்த்தற்கன்றோ? அஃதில்வழி யறிந்ததனாற் போந்த பயன் யாதாம் ? அறிந்த பொருளை அந்நிலையினின்று "சிவோகம்" பாவனையால் எய்தக் காதல்மிக்கு முயல்வேனாயின், அன்னோ! அற்றம் பார்த்து அருகில் நிற்கும் எனது பழக்கமாகிய அறியாமை, எனக்கு யாதோ நன்மை விளைவிப்பது போல், பையஅடி பெயர்த்து என் தியானத்தை அறத்தொலைத்தற்காக, (இதசத்ரு) அகம் நகாது புறம் நகும் பகைஞனைகத் தோன்றி மனத்திற்பண்டே போல் வீற்றிருக்கின்றதே ! அதனால் என்னை விலகியிருந்த ஆணவம், மாயை, கன்மம் என்னும் அதன் மூன்று நண்பர்களும் பழமை பாராட்டித் திரும்பவும் நுழைவார்களோ ? என்று என்னுள்ளந் திடுக்குற்றுத் தியங்குகின்றதே ! இப்பொல்லாத பகைஞர்கட்கிடையில் யான் எங்ஙனம் உய்தல் கூடும் ? எல்லா விடங்களிலும் இடையீடறக் கலந்து நிற்கும் அகண்டாகார இன்பமயப் பொருளே ! இதனைக் கண்டும் இரங்கிக் கருணை செய்யாமை அறமாமோ ? பேதையேன் பிழைத்துய்வதால் நினக்குண்டாகும் இழப்புத்தான் யாது ? இம்மாற்றாரைத் தலை துமித்துக் கொன்று தொலைக்கவேண்

டியதே. வேறு வழியிலது; என் செய்வேன்? எனக்கொரு கூர்வாள் நல்குதி. அஃதே சிரத்தை என்பது. இவ்வாள் ஒன்றுதவினும் போதாது; வன்கண்ணரல்லார்க்கு வாளோ டென்! ஆதலின் என் உள்ளத்தில் தைரியமும் உதிக்கச் செய்வாய். அஃதே மெய்ஞ்ஞானமாவது. கையகத்துவாளும் கருத்தகத்துத் தீரமும் தந்ததோ டமையுமெனக் கைவிடாதீர்! எனக்குற்ற துணையாயும் நின்று அப்பகைவர் செய்யும் இடுக்கண்களினின்றும் மீட்டருள்வீராக'' எனக்குறையிரக்கின்றார்.

எவர் உதவியால் ஒருவர் ஒரு பொருள் பெற்றாரோ அப்பொருளை அவர் தமக்கீந்த பாக்கியமெனக் கூறிக்கொள்ளல் நன்றியறிவா ரியல்பாம். இவ்வியல்பை நகைச்சுவை பயப்ப வேறோர் வகையால் கூறலாம்.

தன் மருகன் இல்லத்துக்கு ஓர் மாமனார் போந்தார். அம்மருகன் மாமனாரை அன்புடன் உபசரித்துத் தன் அரும்பெறல் மகவை அவர்க்குக் காட்டி, இம்மகவு, தாங்கள் அருளிய பேறு என்றுரைத்தனன். மாமனார் அதற்குத் திரிபாய பொருள் கொள்ளாது, யான் என் புதல்வியை இவற்கீந்தேன்; "அவளால் இம்மகவை அடைந்தேன்," என விதக்கின்றான் இவ்வாறு கூறா நின்றான் என்றுணர்தல்போல், உயிரை இறைவனே என்றுபசரிப்பது நன்றி பாராட்டு முறையாம் எனப் பொதுவகையிற் பொருள் கொள்க.

இங்ஙனம் வேதாந்தசித்தாந்த சமரசநிலையை உள்ளங்கை நெல்லியெனக் கண்ட உத்தமனாராய அடிகள் (தாயுமானார்) இவ்வுண்மைக்கு மாறாக ஆணவ முதிர 'அது நான்' எனக் கூவும் ஏகான்ம வாதிகளை மிகவும் வெறுக்கின்றார். "கொல்லா விரதமொன் றாகொண் டவரேநல் லோர்மற் - றல்லாதார் யரோ அறியேன் பராபரமே" "ஆனாலும் மெத்தப் பயந்தவன் யான்என்னை ஆண்டநீ கைவிடாதே" எனப் பிறரை இன்னது கூற அஞ்சி, அடக்கம் பெரிதுமுடையராய் நிற்கும் அடிகள் "பன்முகச் சமயநெறி படைத்தவரும் யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும் வாததர்க்கமிடு படிறரும்" என அவரைக் கடுஞ்சொற் கூறிக் கண்டித்தலும்



காண்க. தாமும் கெட்டுப் பிறர்க்கும் கேடு சூழு நெறியிற் றலைப்பட்டு உண்மை யுணராது திரிபுணர்ச்சி கொண்டொழுகும் அவரைக் கண்டித்து நல்வழிப்படுத்தல் நல்லோர்க்குரிய மறக்கருணை யியல்பா மென்க. இவ்வடிகள், "வேதம் உயிர்களைப் பிரமம் எனக் கூறுவதில் வியப்பொன்றுமில்லை. அதற்குக் காரணம் இதுவாகும்," எனத் தமது நூலிற் பிறிதோரிடத்தில் விளக்குகின்றார்.

"வானாதி நீயெனவே வைத்தமறை என்னையுநீ
தானாகக் கூறாதோ சாற்றாய் பராபரமே"

வேதம், ஐம்பூதங்களையும் அன்னத்தையும் இவை போன்ற சடப்பொருட்களையும் பிரமமாகிய நீயே என்று உபசரிக்கின்றதாக, அஃது, அச் சடப்பொருட்களிற் சிறந்து அறிவுடைய உயிராகிய என்னையும் பிரமமெனக் கூறாது விடுமோ? வேம்பையே வெல்லமென்பவன், புளியைப் பூமியின் அமிழ்தம் என்றுரையானோ? அதனாலாய பயன் யாது? என்று மொழிகின்றார். மற்றும், நான்பிரம மென்றால் நடுவேயொன் றுண்டாமே...." என்று ஆணவமலம் "நான்பிரம மென்பது," காரணமாகக் கொழுத்துத் தடித்துக் குடிகெடுத்துவிடுமே என்று கருதி அதன்பேர் சொல்லவும் அஞ்சி 'நடுவே ஒன்று உண்டாமே' என்று நடுங்குகின்றார்.

இக் கூறியவற்றை ஊன்றி நோக்கின் "வேதாந்தம் சித்தாந்தம் வேறென்னார்" கொண்ட உண்மைக் கருத்தையும், அஃதறியாத ஏகான்ம வாதிகள் தம்மை வேதாந்திகள் எனக் கூறிக்கொள்ளும் அறியாமையையும், வேதாந்தமென்னும் பெயரொருமைபற்றி அவ்விரண்டு மொன்றெனக்கொள்ளுதல் ஒவ்வாதென்பதனையும், நன்குணரலாம். (தொடரும்)

# திருநீற்றின் சிறப்பு*

[S. A. அமிர்தகடேஸ்வரம் பிள்ளை, வேளாங்கண்ணி]

(மலர் ௮. இதழ் ௯. பக்கம் ௩௮௧-ன் தொடர்ச்சி)

அருள் வெண்டிருநீற்றை அன்புடன் தரிப்போரிடம் அரன் என்றும் நீங்காதுறைவன். நீறிடுவோர் திருவுருவம் சிவஉருவமே; சிவபெருமான் தன்னை வணங்குவோர்க்குத் தனது திருவுருவத்தைத் தந்தருளுவர். அத்தகையோரை வணங்கல் சிவநாதனை வணங்கல் போலேயாம். இதனைச் சிவஞானபோதம் ௧௨-ம் சூத்திரத்தின் ௩-ம் அதிகரணத்திற்பத்தாது திருவெண்ணீறணிந்த திருவேடத்தை பரமேசுரனுகக் கொண்டு வழிபடுமாறு வலியுறுத்தல் காணத்தக்கது.

இம்மட்டோ, நமது வாக்கின் மன்னர்

"எவரேனுந் தாமாக இலாடத்திட்ட திருநீறும்
சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே அவரவரைக் கண்டபோது உகந்தடிமைத் திறம்
நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமேபேணி
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர்
நடுதறியைக் காணலாமே"

என அழகு பெற அருளிச் செய்வாராயினர். மேற் கூறிப்போந்த முறைப்படி குறித்தபோது தரித்து அஞ்சக்கரமும் ஓதுபவரின் திருவுள்ளமானது நீதியோர்கட்கு வேந்தனும் அமரர்கட்கு அதிபனும் ஒப்பற்ற உமையினைத்திருக்கையி

---

*பிழை திருத்தம்:—எனது, 'திருநீற்றின் சிறப்பு' என்னும் உரை நடையில் மலர் ௮. இதழ் ௯-ன் ௩௭௮-ம் பக்கத்தில் கடைசிவரி 'திருக்கையம் போக உரைத்தோனதில்லை தெய்வங்களே' என்பதற்குப் பதிலாக 'திருக்கையம் போக உரைத்தோன் சிலம்பிற் சிறுமிதற்கே' எனத் திருத்தி வாசிக்க வேண்டுகிறேன்.



னிடம் கொண்ட சிவபிரான் நட்டமாடும் அம்பலமேயாம் என்பதுக்கு கீழ்வரும் வெண்பா ஒன்றே போதிய சான்றும்.

"போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை
ஓதுவார்த முள்ளமெ னவுரைப்பார்—நீதியார்
பெம்மான் அமரர் பெருமான் ஒருமான்கை
அம்மான் நின்றாடும் அரங்கு"

இவ்விதம் அருள்ததும்பும் சிவப்பேற்றை எளிதில் தரும் திருநீற்றின் சாதனத்தை நம்மவர் கைக்கொண்டிருப்பது பிறவிகடோறும் செய்த சிவபுண்ணியத்தின் பயனேயாம் என்பது கொள்ளக்கிடக்கிறது. திருநீறுதரிப்போரே சிவபெருமானின் மெய்யன்பர்; மற்றையோர் அல்லராவர்.

"பேசப் பட்டேனின் னடியாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதலா ராலுன்னடியானென்
றேசப் பட்டேனினிப் படுகின்றமை யாதா
லாசைப் பட்டேன் ஆட்பட்டே னுன்னடியேனே"

என மணிவாசகத்தும் வந்தமை காண்க.

ஆதலால் ஆன்மாவை அருளொடு கலந்து நிற்கச் செய்து ஆனந்தமயமாக்குவதும் வெண்டிருநீறே.

"கங்காளர் பூசுங் கவசத்திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வாரே யாமாகில்
தங்கா வினைகள் சாரும் சிவகதி
சிங்காரமான சிவனடிக்கண் சேர்வரே"

எனக்கூறும் திருமூலர் திருமொழியையும் உய்த்துணர்வோமாக. (தொடரும்)

# ஆரூரர் அன்பு

[பெ. கோவிந்த மூப்பனார்]

(மலர் அ. இதழ் கா. சஙஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

**து**றவாவது : நிலையாப் பொருள்களைத் துறந்து நிலையுடைய கடவுட் பொருளைப் பற்றுதல். வேந்தராய் நிலவுலக முழுவதும் ஆட்சிசெய்து இடம்பொருள் ஏவல்களால் பெருமை பெற்றிருந்தாலும், அவ்வுடம்பிலேயே பிணியும் மூப்பும், இறப்பும், துன்பமும் ஏற்படுதலின், அவ்வுடம்போடு கூடி வாழ்தலைவிட்டு இறைவனை அடையுமாறு நாயனார் தந் நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றார்.

“ வேந்தராயுல காண்டறம் புரிந்து
வீற்றிருந்த இவ்வுடலிது தன்னைத்
தேய்ந்திறந்து வெந்துய ருழந்திடுமிப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே ”

என்று கூறுதல் காண்க.

மெய்யுணர்வாவது உண்மைக்கடவுளை ஐயந்திரிபற உணர்தல். உலகத்தில் பலசமயங்களிருப்பினும் நாயனார் காலத்தில் சிறந்து விளங்கிய புத்த சமண சமயங்கள் பிறந்திறந்த உயிரையே கடவுளாகக்கொண்டு வழிபட்டமையின் அவற்றை ஒழித்துப் பிறப்பிறப்பில்லாப் பெரியோனை உண்மைக் கடவுளாகக்கொண்டு வழிபடும் சைவசமயஞ் சார்ந்து, அக்கடவுளை அடையுமாறு தம் மனத்திற்குக் கூறுதலைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

“ நமைஎலாம் பலரிகழ்ந் துரைப் பதன்முன்
நன்மை யொன்றிலாத் தேரர்புன் சமணாம்
சமயமாகிய தவத்தினா ரவத்தத்
தன்மை விட்டொழி நன்மையை வேண்டின்
உமையோர் கூறனை ஏறுகந் தானை
உம்பரா தியை எம்பெரு மானைச்
சிமயமார் பொழில் திருத்தினை நகருள்
சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே ”



அவா வறுத்தலாவது : துறக்கப்பட்ட புலன்கள்மேல், வினை வயத்தால் ஏற்படும் வேட்கையை ஒழித்தல். நாயனார் இறைவனை அடைதலிலேயே எண்ணங் கொண்டமையின், தம்மால் துறக்கப்பட்ட மாதர்களிடத்தும் வாழ்க்கையிடத்தும், நினைப்பையும், சொல்லையும் செயலையும் ஒழிக்குமாறு தம் உள்ளத்திற்கு உணர்த்துகின்றார்.

“ வடிகொள் கண்ணினை மடந்தையர் தம்பால்
மயலதுற்று வஞ்சனைக் கிடமாகி
முடியுமா கருதேல் ”

“ பாவமேபுரிந் தகலிடந் தன்னில்
பலபகர்ந்தல மந்துயிர் வாழ்க்கைக்கு
ஆவஎன் றுழந் தயர்ந்து வீழாதே
அண்ணல் தந்திறம் அறிவினால் கருதி
சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே ”

என்பவற்றாலுணரலாம்.

திருநெல்வாயிலரத்துறைப் பதிகம் இத்திருத்தினை நகர்ப் பதிகத்தைக் காட்டிலும் நிலையாமை முதலியவற்றைத் தெள்ளத்தெளிய விளக்குகின்றது. இருவூர்களும் நடுநாட்டிலிருக்கின்றன. கருத்திலும் இடத்திலும் ஒற்றுமை காணப்படுதலால், திருநெல்வாயிலரத்துறைப்பதிகம் நாயனாரது வாழ்க்கைத் தொடக்கத்தில் பாடியிருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. ஆனால் அப்பதிகம் நாயனார் ஒருகண் பெற்றபின்பாடப்பட்டது என்று பெரியபுராணம் கூறுகிறது.

திருத்தினை நகரை நீங்கித் திருவிடைமருதூரை யடைந்து இறைவனை வணங்கி வாழ்க்கையின் தாழ்வையும், அதிலேற்பட்ட துன்பத்தையும், பயனின்றிக் காலங்கழித்ததையும் தெரிவித்துத் தமக்கு உய்யு நெறி அருளுமாறு ஆரூரர் வேண்டிக் கொள்கிறார். திருப்புன்கூரையடைந்து,

“ நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானும்
கற்ற சூதன் நற்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்ல னென்றிவர்கள்

குற்றஞ் செயினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டு நின்குரை கழலடைந்தேன்
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கைசூழ் திருப்புன் கூரு ளானே "

என்றுகூறி, முன்னர்இறைவன் ஆவணம் காட்டி ஆட்கொண்ட காலத்தில் தாம் வன்மைகள் பேசி வல்வழக்கிட்டது போன்ற குற்றங்களைப் பொறுத்தருளுமாறு வேண்டிக்கொள்கிறார்.

இதுகாறும் 'கூறியவற்றால் ஆரூரர் சிவபெருமானுக்கு ஆட்படுதலிலேயே எண்ணங் கொள்ளுதலையும், உடல் பொருள், பெண்டிர், உலகவாழ்க்கை, புறச்சமய முதலியவற்றில் வெறுப்புக் கொள்ளுதலையும், உண்மையான நெறியில் நடக்கவிரும்புதலையும், குற்றங்களைப் பொறுக்குமாறு வேண்டிக் கொள்ளுதலையும் நாம் அறியலாம். ஆட்படும் அன்பும், பணிவோடு, கூடியவேண்டுகோளும் நாயனாரிடம் இருப்பதால் அவருடைய வாழ்க்கைத் தொடக்கத்திலிருந்த அன்பு அடிமையன்பு என்றே சொல்லவேண்டும். பிந்திய வாழ்க்கையில் ஆட்படும் அன்பும், பணிவோடு கூடிய வேண்டுகோளும் வாழ்க்கையும் மாறுபடுதலை யறியலாம். அவருடைய துறவறக்கொள்கைகள் சொல்லளவில் நின்றுவிட்டன. சுந்தரர் பல ஊர்களுக்கும் சென்று சிவபெருமானை வணங்கிக்கொண்டு திருவாரூரை யடைந்தார். இறைவனை வழிபடுவதற்குக் கோயிலுக்குச் சென்றவர் பரவையாரைக் காண்கின்றார். "வடிகொள் கண்ணிணை மடந்தையர் தம்பால் மயலதுற்று வஞ்சனைக் கிடமாகி முடியுமா கருதேல்'' எனத் தமது நெஞ்சுக்கு அறிவுறுத்திய நாயனார் பரவையாரைக் கண்டதும் "கற்பகத்தின் பூங்கொம் போகாமன்றன் பெருவாழ்வோ பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ'' என எண்ணிக் காதல்கொள்ளுகிறார். மணக்கோலத்தைத் துறந்து பெற்றாரையும் சுற்றத்தாரையும் மறந்து, அற்புதப்பழ ஆவணங்காட்டி மணவினையை நீக்கியருளிய மாதோர் பாகனார்க்கு ஆட்பட்ட நாயனார், பரவையாரைக் கண்டபின் அவரை அடைவதற்கும் அக்கடவுளிடமே தெரிவித்துக் கொள்கிறார். அவரும் சுந்தரர் உள்ளக்கருத்தை அறிந்து பெற்றோர்கள் தம்முடைய மகன் தன் மனத்தினால்



விரும்பிய பெண்ணைக் காதலிக்க, அதனையறிந்து காதலிருவருக்கும் முழுத்த காலத்தில் மணமுடித்து வைப்பதுபோல, தம்முள் காதல் கொண்ட சுந்தரருக்கும் பரவையாருக்கும், முன்னர் மனைவியைத் தடுத்த சிவபெருமானே பின்னர் மணவினையை முடித்தருளினன்.

சுந்தரர் இல்லறத்திலிருந்து பரவையாரோடு இன்பந் துய்த்து வந்தார். இல்லறம் பொருளின்றி நடைபெறுவதில்லை. நாயனாருக்கு நெல்லும் பொருளும் வேண்டும். குண்டையூர்க்கிழார் என்பவர் அவருக்குப் பலநாள் நெல் முதலிய வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் யாவற்றையும் கொடுத்து வந்தார். குண்டையூர்க்கிழார் பலநாள் கொடுத்து வந்தாலும் நாயனாருக்கு வேண்டும்போதெல்லாம் வேண்டியவற்றை எல்லாம் கொடுத்தவர் சிவபெருமானே யாவர். குண்டையூர்க்கிழார் இறுதியில் கொடுத்த நெல்லும் சிவபெருமான் கொடுத்த நெல்லே.

சிவபெருமான் அருளால் குண்டையூரில் கிடைத்த நெற் குவியல்களைக் குண்டையூர்க்கிழார் நாயனாருக்குக் கொடுத்தார். நாயனார் அவற்றைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்லவேண்டும். அவற்றை நாயனார் தாமே எடுத்துச் செல்லவேண்டும் அல்லது ஆட்களைக்கொண்டு எடுத்துச் செல்லவேண்டும் அல்லது மனைவியைக்கொண்டு எடுத்துச் செல்லவேண்டும். நாயனார் தாமே அவற்றை எடுத்துச்செல்ல விரும்பவில்லை; தாம் புது மாப்பிள்ளையாதலும் பரவையார் வீடு, புக்க வீடாதலும் காரணம்போலும். கூலிக்கும் ஆட்கள் கிடைக்கவில்லை. முடிவில் பரவையாரைக் கொண்டே நெல்லை எடுத்துச் செல்லவேண்டும். நெல்லை எடுத்துச் செல்லாவிட்டால் உணவுக்கு வேறு வழியில்லை. மனைவியிடமோ வேலை வாங்க அவருக்கு மனம் வரவில்லை. மனைவி வேலை செய்தால் அவளுடைய தலை, கால் முதலிய உறுப்புகளுக்கு நோவு உண்டாகும் என்று எண்ணுகிறார். புது மணமகன் புது மனைவியிடம் அன்பு காட்டுதல் உலக இயற்கை. மனைவியின் வருத்தத்தை நோக்கி, செய்யவேண்டிய வேலையை அவளால்செய்து முடிக்காமல், பெற்றோர்களி

டம் தெரிவித்து அவர்களைக்கொண்டு மணமகன் அவ்வேலையைச்செய்து முடிப்பதும் உலகஇயற்கை. அவ்வாறே சுந்தரரும் பரவையாரிடம் வேலை வாங்காமல் தமக்குத் தந்தையாகவும் தாயாகவும் இருக்கிற கடவுளைக்கொண்டு அந்நெற் குவியல்களைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்லுகிறார். அப்பொழுது பாடிய பாடல் பின் வருவது.

"நீளநினைந் தடியேன் உனைநித்தலும் கைதொழுவேன்
வாளனகண் மடவாளவள் வாடிவருந் தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவையட்டித் தரப்பணியே"

பின்னர்ப் பரவையார் பங்குனி உத்திரச் செலவிற்குப் பொன் கேட்க, நாயனார் திருப்புகலூரை யடைந்து இறைவனை வணங்கிப் பொன் பெற்றுத் திருவாரூருக்குத் திரும்பி வந்து அப்பொன்னைப் பரவையாரிடம் சேர்க்கிறார். திருமுதுகுன்றினுக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் பெருமானை வேண்ட அங்குப் பன்னீராயிரம் பொன் கிடைத்தன. அவற்றைத் தாமே கொண்டு செல்லாமல், தாம் திருவாரூரையடைந்து அங்குள்ள குளத்தில் இறங்கி எடுக்கும்போது கொடுத்தருள வேண்டுமென்று இறைவனுக்குத் தெரிவித்து அவற்றை அங்குள்ள மணிமுத்தா நதியில் போட்டு விட்டார். நாயனார் சிதம்பரம் முதலிய பல தளிகளை வணங்கித் திருவாரூரை யடைந்து பரவையாரையும் அழைத்துச் சென்று குளத்திலிறங்கி அப்பன்னீராயிரம் பொன்னையும் எடுத்துக் கொள்கிறார். பின்னர்த்தொண்டை நாட்டுத் தளிகளை வணங்க எண்ணி நாயனார் திருவாரூரினின்றும் பிரிந்து பல கோவில்களையும் வணங்கித் திருவொற்றியூரைச் சேர்கின்றார்.

திருவாரூரை அடையு முன்னர், சுந்தரரிடம் இறைவனுக்கு ஆட்படுதலில் அன்பும், மகளிரிடத்திலும் பொருளிடத்திலும் வாழ்க்கையிடத்திலும் வெறுப்பும் இருந்தன. தமக்கு உய்யும் நெறியருளவும் தமது குற்றங்களைப் பொறுக்கவும் நாயனார் இறைவனிடம் வேண்டிக்கொண்டார்; திருவாரூரை அடைந்தபின் பரவையாரிடத்தில் விருப்பங் கொண்டார்; அவரோடு கூடி வாழ்தலில் விருப்பங் கொண்டார்;



வாழ்க்கைக்கு வேண்டும் நெல் பொன் முதலியவற்றில் விருப்பங் கொண்டார்; பரவையாரையும் பொன் முதலியவற்றையும் தமக்குத் தந்தருளுமாறு இறைவனை வேண்டிக் கொண்டார். இதனால் நாயனாரிடம் முன்னிருந்த ஆட்படும் அன்பும் துறவறக்கொள்கைகளும் திருவாரூரை அடைந்த பின்னர் அவரிடம் இல்லாதிருத்தலை நாம் அறியலாம். திருவாரூரை அடைந்த பின்னர், நாயனார் இறைவனிடம் அன்பு செலுத்தினாலும், கருத்தால் வேறுபடுதல் காண்க. நாயனார் இறைவனிடம் பரவையாரை வேண்டலும், வாழ்க்கைக்குப் பொருள் முதலியவற்றை வேண்டலும், அவற்றைத் திருவாரூரிற் சேர்க்கும்படி வேண்டலும், இறைவன் நாயனாருக்குப் பரவையாரை மணம் புரிவித்தலும், வாழ்க்கைக்கு வேண்டும் நெல், பொன் முதலியவற்றைக் கொடுத்தலும், அவற்றைத் திருவாரூரிற் சேர்த்தலும், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களிடம் தாம் விரும்பிய பெண்களை மணம் புரிவிக்கும்படி வேண்டுதல் முதலிய வேண்டுகோளோடும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விருப்பப்படி மணம் புரிவித்தல் முதலிய கடமைகளோடும் ஒப்பாதல் காண்க. நாயனார் அன்பு பிள்ளை தன் பெற்றோரிடம் செலுத்தும் அன்பு போன்றிருத்தலின் அவரதுஇடைக்கால அன்பை மகவன்பு என்று கொள்ள வேண்டும்.

சுந்தரர் திருவொற்றியூரை யடைந்து சிவபெருமானைப் பணிந்து செல்லுகையில், திருவாரூரில் பரவையாரைக் கண்டு காதல் கொண்டது போல மேலே சங்கிலியாரையும் கண்டு காதல்கொண்டார். சிவபெருமானிடம் தெரிவித்துப் பரவையாரை மனைவியாகக் கொண்டது போலவே அவரிடம் தெரிவித்துச் சங்கிலியாரையும் மனைவியாகக் கொள்ள எண்ணித் தெரிவித்தார். இறைவனும் சங்கிலியாரிடம் மணமகனைக் குறித்தும், மணத்தைக் குறித்தும் தெரிவிக்க, சுந்தரர் பரவையாரை மணந்து திருவாரூரில் உறைபவராதலின் அவரை மணப்பது எவ்வாறு தகுதியாகும் என்று சங்கிலியார் அவரிடம் விண்ணப்பித்தார். சுந்தரர் திருவொற்றியூரைப் பிரியாமலிருப்பதற்கு ஒரு சூளுறவு செய்து கொடுப்பாரென்று சங்கிலியாருக்குத் தெரிவித்து உடன்படுமாறு

செய்து, சிவபெருமான் மீண்டு வந்து சுந்தரரிடம் நிகழ்ச்சியைக்கூறினார். சுந்தரருக்குச் சங்கிலியாரை மணக்காமலிருக்க எண்ணம் வரவில்லை. திருவாரூருக்கும், இறைவன் எழுந்தருளியிருக்கும் வேறு தளிகளுக்கும் செல்லாமல் திருவொற்றியூரிலேயே இருப்பதும் முடியாத செயல் என்று கருதி நாயனார் சங்கிலியாரை வஞ்சிக்க எண்ணினார். சூளுறவு செய்கையில் கோயிலுள்ளிருக்காமல் மகிழ மரத்தடியிலிருக்க வேண்டுமென்று, இறைவனை வேண்டிக் கொண்டார். சங்கிலியார் உண்மைத் தொண்டு செய்பவளாதலின் இறைவன் அவரை வஞ்சிக்க எண்ணவில்லை. சுந்தரர் வேண்டுகோளை அம்மங்கையாரிடம் தெரிவித்தார். சங்கிலியார் அதனையறிந்து மகிழ மரத்தடியிலேயே இறைவன்முன் சுந்தரரிடம் சூளுறவு பெற்றுக் கொண்டு அவரை மணந்து கொண்டனர்.

சுந்தரர் திருவெண்ணெய் நல்லூரில் மணக்கோலத்தை விடுத்து இறைவனுக்கு ஆட்பட்டதற்கும், திருவாரூரில் பரவையாரைக்கண்டு காதலித்து, இறைவனிடம் தெரிவித்து, அவரைக்கொண்டு அம்மங்கையை மணந்து கொண்டதற்கும், திருவொற்றியூரில் சங்கிலியாரைக்கண்டு காதலித்து, இறைவனிடம் தெரிவித்து அம்மங்கையை பெறுவதற்கு வேண்டிக் கொள்ளுதலோடு அம்மங்கையை வஞ்சிக்க எண்ணி, இறைவனையும் உடன்படுமாறு வேண்டிக்கொண்டு அவரது உதவியால் மணந்து கொண்டதற்கும் வேற்றுமையிருத்தலை அறியலாம். அடிமை ஒருவன் தன் தலைவனை வஞ்சிக்க எண்ணினாலும் எண்ணுவான் ; தன் வஞ்சனைக்குத் தக்கவாறு நடக்கும்படி தலைவனை வேண்டிக்கொள்ள மாட்டான். மகனும், தன் தகப்பனை வஞ்சிக்க எண்ணினாலும் எண்ணுவான்; தன் வஞ்சனைக்குத் தக்கவாறு நடக்கும்படி தன் தகப்பனை வேண்டிக் கொள்ளமாட்டான். ஒருவன் மற்றொருவனை வஞ்சிக்க எண்ணித் தன் வஞ்சனைக்குத் தக்கவாறு நடக்கும்படி வேண்டிக் கொள்ளுதல் தன் பயனை விரும்புகின்ற தன்னுடைய நண்பனிடத்தே மிகுதியும் காணப்படும் நிகழ்ச்சியாம். நாயனாரது முன் வரலாற்றில் இதுபோன்ற நிகழ்ச்சி இன்மையையும் அறிக. அடிமை முறையில் ஒழுகிய நாயனார் பழக்க மிகுதி



யால் மகவு முறையில் ஒழுகத் தொடங்கினார். மகவு முறையில் ஒழுகியவர் பழக்க மிகுதியால் நட்பு முறையில் ஒழுகத் தொடங்குகின்றார். ஒற்றியூருடையவர் சுந்தரர் வேண்டுகோளின்படியும் நடந்து கொண்டார். தம்மிடம் அன்பு செலுத்திய சங்கிலியாரை வஞ்சிக்கலாகாமையின் அவரை வஞ்சிக்காமலும் நடந்து கொண்டார். சுந்தரர் ஒற்றியூரில் சங்கிலியாரோடு பல நாள் இன்பந்துய்த்து வந்தார். இன்பந்துய்த்தவருக்குப் பரவையாரிடத்திலும் ஆரூரிறைவரிடத்திலும் அவா உண்டாயிற்று. ஒற்றியூரைப் பிரியாதிருக்கச் சூளுறவு செய்துகொடுத்த நாயனார் தாம் ஒற்றியூரை விட்டுப் பிரிந்தாலும் இறைவன் தம்மைப் பொறுத்துக் கொள்வாரென்று எண்ணித் திருவாரூருக்குச் செல்லத் திருவொற்றியூரின் எல்லையைக் கடந்தார். அவர் இறைவனால் தண்டிக்கப்பட்டார் ; அவருடைய கண்கள் இரண்டும் குருடாயின.

சிவபெருமான் ஆவணங்காட்டி ஆரூரரைவலிய ஆட்கொண்டார் ; பரவையாரிடம் சென்று அவரை மணம் புரிவித்தார் ; வாழ்க்கைக்கு வேண்டும் நெல்லும் பொன்னும் கொடுத்தார் ; வஞ்சனைக்கும் உடன்பட்டுச் சங்கிலியாரையும் மணம் புரிவித்தார். இவ்வாறு உற்றுழியெல்லாம் உறுதுணையாக இருந்த இறைவன் ஒற்றியூர் எல்லையைக் கடந்ததும் நாயனாரைத் தண்டிக்கிறார். சுந்தரர் ஒற்றியூர் எல்லையைக் கடந்ததனால் இரண்டுவகைக் குற்றங்களுக்கு ஆளாகுகின்றார். ஒன்று இறைவன் முன்செய்த சூளுறவை மதியாதுகடத்தல்; மற்றொன்று சங்கிலியாரை வஞ்சித்தல். சுந்தரர்க்கு உற்றுழியெல்லாம் உறுதுணையாக இருந்து உதவிய இறைவன், தம் முன்செய்த சூளுறவைக் கடந்த குற்றத்தையும் பொறுத்திருப்பார் ; தம் பேச்சைக் கேட்டு மணஞ் செய்துகொண்ட சங்கிலியாரை வஞ்சித்தலின் அவரை இறைவன் தண்டிக்கிறார். இதனால் இறைவன் கருத்து சுந்தரரிடம் வேறுபட்டிருப்பதை அறியலாம். இந்நிகழ்ச்சியிலிருந்து இறைவனிடம் சுந்தரர் கருத்தும் வேறுபடுகிறது.

நாயனார் தம் கண்கள் குருடான பிறகும் “எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என்னாரூ ரிறைவனையே” என்ற எண்ணமே

அவர் மனத்திலிருந்தமையின் திருவாரூருக்குச் செல்லுதலை நிறுத்தவில்லை. தண்டனைக்குப் பயந்து திரும்பிவந்து சங்கிலியாரோடு வாழ்க்கை நடத்தவுமில்லை. திருவாரூருக்குச் செல்லுதலிலேயே எண்ணங்கொண்டு, தமது கண்கள் ஒளி பெறுதற்கு மருந்து கூறியருளுமாறு ஒற்றியூருடையாரை வேண்டிக்கொள்கிறார். அவர் நாயனாருக்கு ஒன்றும் கூற வில்லை: அதனையறிந்து நாயனார்,

> "மூன்றுகண் ணுடையாய் அடியேன்கண்
> கொள்வதே கணக்கு வழக்காகில்
> ஊன்றுகோ லெனக்காவ தொன்றருளாய்
> ஒற்றியூ ரெனும்ஊ ருறைவானே"

என்று வேண்டிக்கொள்கிறார். நாயனாரது வேண்டுகோள் ஒன்றையும் இறைவன் ஏற்றுக்கொள்ளவில்லை. நாயனார் வழிப்போக்கர் உதவி கொண்டு திருவெண்பாக்கத்தை யடைந்து, கோயிலுள் சென்று "குழைவிரவு வடிகாதா கோயிலுளாயோ" என்று திருமுன்பு நின்று கேட்டார். கேட்ட நாயனாருக்கு அருகு வந்து ஆறுதல் கூறி ஆதரிப்பதற்கு வெண்பாக்கமுடையாருக்கு எண்ணமில்லை. நாயனார் ஒற்றியூரில் கேட்ட "ஊன்றுகோலை மட்டும் கொடுத்தால் போதுமென்று எண்ணி இறைவன் ஊன்றுவதோர் கோலருளி உளோம்; போகீர்என்" றுரைத்து அவரை அனுப்பி விட்டார். மான்றிகழும் சங்கிலியைத் தந்து வருபயன்களெல்லாம் தோன்ற அருள் செய்தளித்தாய் என்றுரைக்க வுலகமெலாம் ஈன்றவனே வெண்கோயி லிங்கிருந்தாயோ வென்ன ஊன்றுவதோர் கோலருளி உளோம் போகீரென் றானே என்ற செய்யுள் மேற்கூறிய கருத்தை விளக்குதல் காண்க.

நாயனார் ஊன்றுகோலின் உதவியினால் கச்சியை யடைந்து, கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்கித் தமக்கு இரு கண்களையும் கொடுத்தருளுமாறு வேண்டினார். இறைவன் சிறிது இரக்கங்கொண்டு அவருக்கு இடக்கண்ணைக் கொடுத்து தனது காட்சியையும் காட்டி யருளினார். நாயனார் இடக்கண்ணைப் பெற்று, இறைவனது காட்சியை



யும் கண்டு "காலகாலனைக் கம்பனெம்மானைக் காணக்கண் அடியேன் பெற்றவாறே" என்று மனமுவந்து பாடி, அவ்வூரையும் கடந்து திருவாரூரை அடைந்தார்.

சுந்தரர் கண்களை இழந்து வடதிருமுல்லைவாயிலை யடைந்து இறைவனைப் பாடுகையில்,

> "தண்பொழில் ஒற்றிமா நகருடையாய் சங்கிலிக்கா என்கண் கொண்ட
> பண்பநின் னடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே"

என்றும்,

> "குற்றமே செயினும் குணமெனக் கருதும்
> கொள்கையால் மிகைபல செய்தேன்"

என்றும் பாடியிருக்கிறார். திருவெண்பாக்கத்தை யடைந்து இறைவனைப் பாடுகையில்,

> "பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
> பழியதனைப் பாராமே படலமென்கண் மறைப்பித்தாய்"

என்றும்,

> "பொய்யடியேன் பிழைத்தக்கால் பொறுத்திடநீ வேண்டாவோ"

என்றும் பாடியிருக்கிறார். இவற்றால் நாயனார் தாம் சங்கிலியாருக்குச் செய்து கொடுத்த சூளுறவை மீறியது தம்முடைய குற்றம் என்று உடன்படுதலை யறியலாம். சூளுறவை மீறினாலும் இறைவன் தம்மைப் பொறுத்துக்கொள்வார் என்று நாயனார் எண்ணியதையும், மீறிய குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளாமல் இறைவன் தண்டித்ததையும் அறியலாம். இவ்வாறிருக்க, நாயனார் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானைப் பாடுகையில்,

> "விற்றுக்கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி யாட்பட்டேன்
> குற்றம் ஒன்றும் செய்ததில்லை கொத்தை யாக்கினீர்
> எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரேபழி பட்டீர்
> மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே"

என்று பாடுகிறார். இதில் தம்மிடத்தில் குற்றமில்லை என்றும், குற்றம் செய்யாத தமக்குக் கண்களைக் குருடாக்கினது இறைவனுடைய குற்றமே என்றும் கூறுதல் காண்க.

சூளுறவை மீறியது தம்முடைய குற்றமென்று முன்னர் உடன்பட்டவர் திருவாரூருக்கு வந்தபின், அதனை உடன்படுகின்றாரல்லர். திருவாரூருக்கு வந்தபின் சூளுறவைக் குறித்தும் இறைவன் செய்கையைக் குறித்தும், மற்றும் ஒருமுறை எண்ணுகையில், கோயிலுளிருக்காமல் மகிழமரத்தடியிலிருக்குமாறு தாம் இறைவனை மறைவில் வேண்டிக்கொள்ள அவ்வாறிருக்க உடன்பட்டபின் அவர் அம்மறையைச் சங்கிலியாரிடம் கூறி வெளிப்படுத்திய குற்றவாளியாக இருந்துகொண்டே அவரை நம்பிய தம்மிடம் குற்றமிருக்கிறதென்று எண்ணித் தம்மைத் தண்டித்தது அவரது பழிச்செயலேயாகும்; தம்மிடத்தில் குற்றமின்று என்று நாயனார் எண்ணினார் போலும். சூளுறவு செய்து அதனைக் கடந்தது நாயனாரது குற்றமன்றோ எனின் அது தம்முடைய குற்றமென்று அவர் முன்னர்ப் பாடிய பாடல்களால் விளங்குதல் காண்க.

நாயனார் திருவாரூரை அடைந்தபின், அவர் சங்கிலியாரைக் காதலித்து மணந்ததை யறிந்த பரவையார் அவரோடு ஊடல் கொள்கிறார். நாயனார் கடவுளாகிய சிவபெருமானையே தூதுவிடுத்து அவ்வூடலைப் போக்கிக் கொள்கிறார். சேரமான் பெருமாள் நாயனாரிடம் பெற்று வந்த பொருளைத் திருமுருகன் பூண்டியில் பறிகொடுத்து விட்டு, அங்குள்ள இறைவனை நோக்கி,

“ முடுகு நாறிய வடுகர்வாழ் முருகன்
பூண்டிமா நகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கைதன் னொடும்
எற்றுக்கிங்கிருந்தீர் எம்பிரானீரே”

என்று கேள்வி கேட்கிறார். வஞ்சனைக் குட்படுத்தலும் தூது செல்லுவித்தலும் கேள்வி கேட்டலும் அடிமைகளிடத்திலும் மக்களிடத்திலும் காணப்படுதலில்லை. ஏற்றத் தாழ்வில்லாத நண்பர்களிடத்தே காணப்படும். ஆகையால் நாயனாருடைய பிற்கால வாழ்க்கை நட்பன்பு என்று கூறப்படும்.



தானே தானாய் அநுபோகம் தன்னில் தன்னை அநுபவித்திட்(டு)
ஊனே உயிரே உணர்வேயென் றொன்று மின்றி உரையிறந்து
வானே முதலாம் பூதங்கள் மாய மாயா தேமன்னி
நானே பிரமம் எனத்தெளியும் ஞானம் பிரம ஞானமே.

(உரை) அகம்பிரமமாய் அநுபூதியுந் தன்னிலே தன்னை அநுபவித்து, காயமென்றுங் கரணமென்றும் வாயுவென்றும் ஒருபேதமுமின்றி இன்னபடியென்று சொல்லுதற்கோர் சொல்லுமின்றி, ஆகாசமுதலாகிய பூதங்கள் கெடவுந் தானொருகாலுங் கெடாதே நிலைபெற்று, அகம்பிரமம் எனத்தெளியும் ஞானமே பிரமஞானம். ௧௪

சாற்றும் மறைதத் துவமசிமா வாக்கி யங்கள் தமையுணர்ந்தால்
போற்றி அதுநீ யானாயென் றறைவ தல்லால் பொருளின்றே
தேற்று மிதனைத் தெளியாதார் தெளியப் பஞ்ச ஆதநமேல்
ஏற்ற இயம நியமாதி யோகம் இருநான் கியற்றுவரால்.

(உரை) சொல்லப்படும் வேதத்தின் முடிவாகிய தத்துவமசி முதலாகிய மகாவாக்கியங்கள் சொல்லும் பகுதியை யுணருங்காலத்து விரும்பி அது நீயானாய் என்பதல்லாது மற்றொருபொருள் சொல்லுதற்கில்லையாம்; ஆதலால், இப்படித் துணியச்சொல்லும் மகாவாக்கியங்களின் உண்மையைக்கொண்டு சோகம்பாவகமாக அறியாதார் அந்த முறையைத் தெளியவேண்டிப் பஞ்சவாதன முதலாகிய பூசிக்குங்கிரியையும் மேலாகிய இயமம் முதலாகிய அட்டாங்கயோகமுஞ் செய்துதிரிவார்.

எனவே சரியை கிரியை யோகமாகியவை பிரமஞானங் கூட வேண்டிச் செய்யுந் தவமென்பது கருத்து. பஞ்ச ஆதனமாவன: கூர்மாசனம், அநந்தாசனம், சிங்காசனம், பத்மாசனம், யோகாசனமாம். அஷ்டாங்க யோகமாவன: இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என இவை. பஞ்சசாதனம் எனப் பாடமாயின் ஆசநமும் யோகபட்டமும் தண்டும் கமண்டலமும் செபமாலையும் எனப்பொருள் கொள்க. ௧௫

## மாயாவாதி மத மறுதலை

ஏகம் நானென இயம்பி இப்படி அறிந்து முத்தியடை மின்னென, மோக மானஉரை சோகம் இன்பொடுமு டிந்தி டாதுமல டாகிய, காக மானதுக ருங்க லின்தசைப றித்த மூங்கரிய குஞ்சியின், தாகமார்பசி தவிர்க்க வாயிடை கொடுத் தடுதன் றுரைசெய் தன்மையே. ௨௫௫

(உரை) 'மாயாவாதி! நீ நான் ஏகப்பிரமமென்றுசொல்லிப் பின்பு கருவிகளை நீங்கி இப்படித் தரிசித்துமுத்தி யடையுங்களென்று மயங் கிச் சொல்லுஞ்சொல், நீ எடுத்துக் காட்டின சோகம்பாவனையேல், அங்ஙனங் கூறும் இனிய ஆன்ம வாக்கியத்தோடு கூடிமுடியாது; அஃதெங்ஙன மென்னில், அவ்வாக்கியம் அது நானேனென் என்கை யால் இரண்டுபட்டுப் பெறுவானும் பேறுமாயொன்று கையால். அஃ தன்றியும் பிரமத்தை விகாரமற்றதாகவுங் கூறி, மீளவும் மயங்கி, அந் தப் பிரமஞ் சீவான்மாவாகப் பேதித்ததாகவுங் கூறினாய்; அதற்குக் கன்மமென் றொருமுதலின்றி இல்லாததனையும் உண்டாக்கி அத னைக் கூடிற்றென்றுங் கூறியது மயக்கம். அஃதென்போலவென்னில், ஒரு மலட்டுக் காகமானது அழுகின்ற தனது கரியநிறத்தையுடைய குஞ்சுக்கு மிக்க பசியைத் தணிப்பான் கரிய கல்லினுண்டான இறைச் சியைவாங்கிக் குஞ்சியின் வாயிலே கொண்டுவந்து கொடுத்ததென்று சொல்லுந் தன்மையாம்.

எனவே, நிர்விகற்பமாகிய பிரமத்திற்குவமை மலட்டுக் காகம். அப்பிரமத்திலே சீவான்மாவாகப் பேதித்த தென்றதற்குவமை அக் குஞ்சி. அந்த ஜீவான்மாவுக்குக் கன்மாதிகளுண்டாக்கிக் கொடுத்தற் குவமை கல்லின் மாம்சம். ௧

நீடு வேதம் அளவாக ஏகமெனும் நீதி தான்நிகழ்வ தாகுமேல், நாடி ஞாதிருவும் ஞான ஞேயமுடன் நாலு நான் மறையும் ஓதலால், ஓடு மாகுமுன(து) ஏகம் ஓதுமிவை ஊன மாகிஉரை மாறுகோள், கூடு மாகும்அநு பூதி தானுமது கூடி டாதறிவி லாமையால். ௨௫௬

(உரை) அநாதியேயுண்டாகிய வேதம் வரையறையாகப் பிரம மொன்றே யென்று சொல்லுவதாக நீ சொன்னாய். அப்படியாயின்,



அந்த வேதத்தில் ஞாதிரு ஞான ஞேயமாகிய மூன்று முதலுமுண் டெனவே தெரித்து நாடோறுஞ் சொல்லுதலால், நீ ஒன்றென்று சொல்லுஞ்சொல் அவ்வேத வாக்கியங்கொண்டே பின்னிடாநிற்கும். இன்னும் நீ பிரமம் ஒன்றே யென்றும் அகம் பிரமமென்றுஞ் சொல் லுஞ் சொற்கள் குற்றப்பட்டுத் தத்துவமசி யென்னும் வாக்கியத் தோடு மாறுகோடலைப் பொருந்தும். உனக்கான்மாவில்லை யாகை யாலே அநுபூதிதானும் உண்டாக மாட்டாது.

நான்மறையும் என்கையால் ஆகமத்துணிவும் பெற்றது. உரை - மகாவாக்கியம். அறிவு - ஆன்மா. ஞாதிரு - ஆன்மா. ஞானம் - ஆன் மாவிற்குச் சகாயபூதமான சிவசத்தி. ஞேயம் - அந்தச் சத்தியாலறி யப்படும் பிரமேயமான சிவம். ௨

நீதியால் ஒளிகொள் பானு வான(து)அக னீரி லேநிகழு மாறுபோல், ஆதி தானுருவ மாய காயமதின் மேவி ஆவ தில யாகுமாம், தீதி லாஅருவ மாதலால் நிழல்கள் சேர வேறிடமி லாமையால், ஓதில் ஓர்அகலின் நீரி லேயொருவர் காணலால் இலதுன் ஏகமே. ௨௫௭

(உரை) கிரணங்களையுடைய ஆதித்தனதுசாயை பாத்திரோத கங்கள்தோறும் முறைமையாலே விளங்குமாபோல, சர்வத்துக்கும் முதலாயிருக்கிற பிரமங் குற்றமில்லாத அரூபமாகையால் உபாதிக ளோடுங் கூடி யுருபமாகிய காயத்திலே பொருந்தி உண்டாவதில்லை யாம்; அன்றியும், பாத்திரோதகம் நிழலின்கண் இருந்தால் ஆதித்த கிரணஞ் செல்லாதாற்போலப் பிரமங்கூடாத காயமுமுண்டாக வேண் டும்; ஆகையாலும், பாத்திரோதகத்திலே ஆதித்தனைக் காண்பான் ஒருவனைப்போலக் காயத்திலே பிரமத்தைக் காண்பான் ஓரான்மா உண்டாகையாற் சொல்லுங்காலத்து உனது அகம்பிரமம் என்பதில்லை யாம்.

அருவமாதலானும, இடமில்லாமையாலும், ஒருவர் காணலாலும் என் உம்மை கூட்டுக. நிழல்சேர வேறிடமிலாமையாலென்பது-பிரம மருவமாதலால் நிழல் சேர்தற் கிடமில்லையா மென்க. ௫

வேறு வாயில்புல னோடு மேல்மனமும் மேவி டாதுபிர மாணமும், கூறி டாதறிவு தானெ னாஉணர்தல் கோடு நீ

முயலின் காடினுய், ஈறி லாதபரம் ஏக மேயென இயம்பு நீ
இசையும் ஞானமும், பேற தாவதிலை பேத மானஇது பேண
வேயுள து பேசிலே. ௨௩௮

(உரை) ஒன்ருெடொன்று கூடாமல் உணரும் பொறிகளும் புலன்களும் அவற்றின்மேலுண்டாகிய மனமுங் கூடாமல் உடலில் ஓரறிவு தனித்து நின்றறியாதிருக்கவும், அறியுமென்று சாத்திரப் பிரமாணங்களுஞ் சொல்லாதனவாயிருக்கவும், நீ பிரமங் காயத்தோடுங் கூடித்தானே தானுய் நின்றறியுமென்று சொல்லிய அறிவு, கோடில்லாத முயலுக்குக் கோடுண்டென்றறிந்த அறிவிற்கொக்கும்; அன்றியும், கேடில்லாத பிரமம் ஏகமாயே நிற்குமென்று சொல்லுகிற நீ, பொருந்து ஞானத்தால் உனக்குப் பயனுண்டாவதில்லையாம். அஃதெங்ஙனமென்னில், பரப்பிரமே சீவான்மாவுமென நீ சொல்லுகையால், நீ இங்ஙனஞ்சொல்லு முறைமையின்றிப்பரமான்மாவும் அதனையறியப்படுஞ் சீவான்மாவுமென இரண்டு முதலுண்டென்று சொல்லும் முறைமையே போற்றவுளது. ௪

இலகு சோதிமணி எனவும் ஏகமெனின் இதனில் ஏக
மது விலகினுய், குலவு காசுமொளி அதுவும் நீடிவளர் குண
மும் நாடுவதொர் குணியுமாம், பலவு மானகுண மொருவும்
ஏகமது எனவும் நீபகரில் நிகரிலா, உலக மானதனை உதவு
மாறதிலை உணர்வு தானுமிலை உணரிலே. ௨௩௯

(உரை) மிக்கவொளியும் மணியும்போல ஒன்ருயிருக்குமென்று நீ சொல்லின், இந்த உவமையாலே ஒன்றென்பதனை மறுத்துக் கூறினுய்; அஃதியாங்ஙனமெனின், விளங்குகின்ற மணியும் பிரகாசமும் மிகவுண்டாகிற குணமும் ஆராய்ந்தறியத்தக்க குணியுமாகையால். அன்றியும் ஒன்ருன பிரமமானது இச்சா ஞானக் கிரியைகளாகிய பல குணங்களை நீங்கி நிற்குமென்று நீ சொல்லின், அந்தப் பிரமத்துக்கு இச்சா ஞானக் கிரியைகளாகிய பல குணங்களில்லையாகில், ஒப்பில்லாத பிரபஞ்சத்தை உண்டாக்குந் தொழிலில்லையாய் அதனைக் காக்கவேண்டுமென்னும் அறிவுமில்லையாம் விசாரிக்குங்காலத்து.

மணியும் ஒளியும் குணமுங் குணியுமாகையால், இரண்டுபடுமென்பது கருத்து. இச்சா ஞானக் கிரியைகளை நீங்கிய நிர்விகற்பமென்னில், இச்சா ஞானக் கிரியையோடுங் கூடியே பிரபஞ்சத்தின் சிருஷ்டி திதி சங்காரங் கண்டு நடத்தவேண்டுகையால், அவை நீங்கி நிற்குமென்னில் அறிவுமில்லையாய்க் கர்த்தாவும் அன்ருமென்பது கருத்து. இராவணனையும் சகத்திரவாகுவையும் ஒன்று பலவானதுக்குவமையிட்டாய். இராவணனொருமுகத்தாற்கண்டதொருமுகத்தாற் சொல்லுமாபோல. உலகத்தில் ஒருத்தன்கண்டதொருத்தனறிந்து சொல்லக் கண்டதில்லை. சகத்திரவாகுவும் பல கரங்களாலும் இயற்றப்பட்ட வில்லும் அம்பும் வலிக்குங்காலத்து வேறுபடுகை வழங்கலும் வினையொன்றின்மேலாம். இது அப்படியன்றென்று கண்டுகொள்க. ௫



புற்றினேர்பழுதை தொக்க போதுமயிர் புளக மாக
அர விரவிலே, உற்ற தாம்அதனை யொக்க வேஉலகுதிக்கு
மாறுமொரு சத்திலே, பெற்ற தாகுமெனின் அப்பி ராந்தி
யுடை யோரும் அப்பிரம பேதமாய், நிற்பர் நீபகரின் முற்
றும் ஐயநிலை பெற்றும் இன்பமதி லாததாம். ௨௪௦

(உரை) புற்றின்கண்ணே பழுதைகிடப்ப, இருளிடத்தே அந்தப் பழுதையைக் கண்டவர்க்குப் பயத்தாலே மயிர் புளகித்துப் பாம்பெனவே நினைக்கப்படுவதாம். அதுபோல, பிரபஞ்சமும் ஒப்பற்றதாகிய பிரமத்திலே தோன்றுமாறும், அதனதயிக்கியத்தாலே அப்பிரபஞ்சமும் மெய்போலத் தோன்றும் முறைமையும் பெற்றதென்று நீ சொல்லின், அங்ஙனம் மயங்கின அறிவையுடைய ஆன்மாக்களும் இச்சா ஞானக் கிரியை யுண்டாய்ப் பிரபஞ்சகிருத்தியஞ் செய்வதில்லையென்று நீ கூறும் பிரமத்தின் பேதமாய் நிற்பராம். இப்படி நீ சொல்லின் நினக்கு மிக்க மயக்க அறிவேயுண்டாய்ப் பிரமமாம் இன்பமுண்டாகாது.

பழுதையைப் பாம்பென்று பிரமித்தது பிரமமாகவேண்டும் அது தான் விகாரமென்னில், கரணங்களுக் கறிவில்லையாம். பிரமத்தின் சந்நிதிமாத்திரத்திலே சலிக்குமென்னில் தெளிந்தகாலத்திற் சந்நிதியிற் சேட்டித்தலில்லையாகவேண்டும். அதுபின் சலித்துத் தத்துவமுங் கூடாதெனக்கொள்க. ௬

ஓதி யேஉலக மதனை நீயும்நிரு வசன மாகஉரை செய்வ
தென், பேதை யோய்உளதும் இலதும் அல்லபொருள் பேசு

வாரும்உள ரோசொலாய், ஆதி யேயுளது வருத லால்இலதி
லாவ தின்மைய தழிந்துபோம், நீதி யால்உள தி லாமை நேர்வ
தெனின் நேர்மை யாகியது நின்றதே. ௨௪௧

(உரை) நீ வேதத்தை ஓதியிருந்தும், பிரபஞ்சத்தை முன்பில்லையென்றும், பின்பு நிருவசநமாகிய பிரமத்திலே தோன்றப்பட்டதென்றுஞ் சொல்லுதலுண்டானதென்; ஒரு பொருள் இல்லதுமன்று உள்ளதுமன்று என்று சொல்லுவாருமுளரோ? ஆகையால் அறியாதவனே சொலாய்; அற்றன்று, ஆதிதோறுந் தோன்றிவருதலால் இல்லையென்ப தில்லையாய் உள்ளதான தழிந்துபோம்; பின்னில்லாமையாம்படி யழிந்துபோம் முறைமையாலே இல்லாமை யுண்டானது; ஆகையால், உள்ளதுமில்லாததும் பிரபஞ்சத்துக்குப் பொருந்திற்றென்று நீ கூறின், அப்படி யழிந்துபோம் பிரபஞ்சம் மீளவும் பிரமத்திலே யுண்டாமிடத்து முன்புபோலத் தோன்றுகையால் அதற்கு மூலகாரணங் கிடந்தழியாமல் நிற்கும். ௭

வேற தாகியது போல்இ ருந்தமையில் வெள்ளி சுத்தி
யெனில் ஐயமே, கூற லாம்ஒருப ரத்தொ டொத்தபொருள்
கொண்டு விண்டநிலை கண்டனம், மாறி டாதுநிலம் நீர தாகி
அனல் வாயு வாகிஅவை மாறியும், சேறி லாதுவிவ கார
மன்றுபர மார்த்த மாயது செறிந்ததே. ௨௪௨

(உரை) மித்தையாகிய பிரபஞ்சம் பிரமம்போல மெய்யாகத் தோன்றினமையால் இப்பியானது வெள்ளியையொக்கப் பிரகாசித்தாற்போலுமென்று கூறின், அந்த இப்பியை வெள்ளியென்று ஐயப்பட்டாற்போலப் பிரபஞ்சத்தையும் பிரமமோ மித்தியையோ என்று ஐயப்பட்டே சொல்லலாம். முன்பிந்தப் பிரபஞ்சம் ஒப்பற்ற பிரமத்தோடொத்த பொருளாகக் கொள்ளப்பட்டு இப்பொழுது மித்தியையாக மாறிக்கண்டனமென்னில், நிலம் நீராகியும் அனல் வாயுவாகியும் மாறிநில்லாது, நீர்நிலனாகியும் வாயு அக்கினியாகியும் மாறியுஞ்செல்லாது. ஆதலால், இப்பிரபஞ்சம் விவகாரத்திலே மெய்யாதலன்றிப் பரமார்த்தத்திலும் மெய்யாகச்செறிந்தது. ௮

**மாய நூலதுசி லம்பி வாயினிடை வந்த வாறதனை**
**மானவே, ஆய தேஉலக மான தும்பிரம மதனி லேயெனில்**



அடங்கிநின்(று), வயு மாகுமொரு சித்து மத்துடன்நி லாத
தென்றுபின் இயம்பின்நீ, பேய னேகடம்மி ருத்தில் வந்
தது பிறப்ப தாவதிலை பேசிலே. ௨௪௩

(உரை) பொய்நூலானது சிலம்பியின் வாயிடத்தே நின்று தோன்றிநின்று கெட்டவிடத்து மீளவும் அதனிடத்தே இந்த நூலாகத்தோன்றி வந்தாற்போல, உலகமானதும் பிரமத்திலே தோன்றிநின்று கெட்டபின் மீளவும் பிரமத்திலே முன்புபோலே தோன்றி வருமென்று நீ கூறின், அரூபமா யவிகாரமாகிய பிரமமும் பிரபஞ்சத்திலே யகப்பட்டு மயங்கவுமாகுமாதலால் நீ கூறியது உவமையன்று, அந்த நூலாகிய சடத்துக்குள் அச்சிலம்பி யகப்படாது நின்றாற்போலப் பிரபஞ்சமாகிய சடத்துக்குள்ளும் பிரமங்கூடி நில்லாது காரணமாய் நிற்குமென்று கூறின், அறியாதவனே கடத்துக்கு மண் காரணமாயிருக்கவுங் காரணமாகிய மண்ணிற் கடந்தானே தோன்றாது; தோன்றுமிடத்தே ஆதிகாரணமாகிய மண்ணும் நிமித்த காரணமாகிய குலாலனும் துணைக்காரணமாகிய திரிகையுங்கூடித் தொழில் செய்யக் கடந்தோன்றுமாபோல, பிரபஞ்சத்துக்கும் ஆதி காரணமுண்டாய்த் தோன்றவேண்டும்.

எனவே, ஆதிகாரணமின்றிப் பிரமமே ஆதிகாரணமாகத் தோன்றுமென்னிற் சித்திலே அசித்துத்தானே தோன்றாதென்பது கருத்து. மிருத்து - மண். மாயநூலென்பது - இல்லாதொன்று தோன்றுவது. மாயையென்பதவன் கருத்தாதலினால் மாய நூலென்றான். பேயனேபடமென்பது பாடமாயின், புடவையானது மண்ணினிடத்துண்டாகாதெனப் பொருள்கொள்க. அஃதாவது ஒன்றின் காரணத்திலொன்றின் காரியமுண்டாகா தென்பதாம். ௯

வேற தாகும்உரு வத்தி லேபரம்வெ ளிப்ப டும்மென
விளம்பில்நீ, ஊறி லாஉருஅ சத்தி லேபிரமம் உண்டு தானு
ணர்வி லாததென், மாறி வாயுவும நாதி யானவையும் வந்தி
டாமையினி லின்றெனில், ஈறு தானுடைய தாய தோபிரம
மென்கொ லோஇவை இறப்பதே. ௨௪௪

(உரை) வன்னபேதமாகிய வேற்றுமைப்பட்ட வுருவத்திலே பிரமம் வெளிப்பட்டு நிற்குமென்று நீகூறின், குற்றமில்லாத ஜடத்தினிடத்திலே பிரமமுண்டாயிருக்க அந்த ஜடமவத்தைப்பட்ட விடத்

தறிவின்றிக் கிடப்பானேன், வாயுவும் அந்தக்கரணங்களும் நீங்கி வந்து கூடாமையினாலே அறிவில்லையானதென்று கூறின், பிரமத்தினறிவு கெடத்தக்கதாயிற்றே? அதுவுமன்றிப் பிரமம் நிற்க வாயுவும் அந்தக்கரணங்களும் நீங்கிய வாயினவோ? ஆதலால், பிரமம் அறிவும் அறியாமையுமாகி உருக்களிலே நில்லாது. ௧௦

பற்ற தின்றிஉடல் நின்றி டும்பரமெ னப்ப கர்ந்தனைப
ரிந்துடன், உற்று டம்புநரை திரைகள் நோய்சிறை உறுப்ப
ழிந்திவையு முள்ளபின், குற்ற மென்றிதனை விட்டி டாதுவிட
வென்ற லும்குலைவு கொண்டிடும், பெற்றி கண்டுமொரு
பற்ற றும்பரிசு பேச வேஉள து னைசையே. ௨௪௫

(உரை) பிரமமானது காயத்திலே நின்றதாயினும் அக்காயத்தோடு பற்றில்லாமல் நிற்குமென்று கூறினாய்; அங்ஙனமாயின் பிரமம் ஆர்வத்துடனே கூடிநின்ற வுடம்பு நரைதிரை நோய் சிறை இவற்றினால் உறுப்பழிவுண்டானபின்பும் இவ்வுடம்பைப் பொல்லாததென்று நீங்கி நிற்கமாட்டாது, அவ்வுடல் நீங்கப்படு மென்னுமிடத்து மிகவும் வியாகுலப்பட்டு நடுநடுங்கா நிற்கும்; ஆகையால், இப்படிக் காயத்தோடும் பற்றிநிற்கு முறைமையை எவ்விடத்தினுங் கண்டிருந்துங் காயத்தோடு பிரமத்துக்குப் பற்றில்லையேன்று உன்னாசையாற் சொல்ல வுள்ளதன்றிப் பற்றுவிட்டதில்லை.

எனவே, பிரமஞ் சீவான்மாவாகவும் பரமான்மாவாகவும் பேதிக்குமெனவுங்கூறி இவ்விடத்துப்பிரமம் பேதியாதெனவுங் கூறியது வழுவாம். உலகானது பேதமென்றபடியோ இல்லையாகில் அபேதமென்றபடியோ சொல்லாய். இதனால், நீ அபேதமென்றது விருத்தமாம். பேதமே யுள்ளதென்க. ௧௧

சோதி மாமணிகள் ஊடு போனதொரு நூலு மானநிலை
சொல்லிடும், நீதி யால்மணிகள் பேத மாகிஒரு நூலின்
நின்றமைநி கழ்த்தினாய், ஆதி தானொருவ னாகி யேபல
அநந்த யோனியில் அமர்ந்தவன், பேதி யாதநிலை பேசி னாய்
உலகு பேத மேஇலத பேதமே. ௨௪௬

(உரை) பிரகாசத்தையுடைய மிக்க பலமணிகளுக்குள்ளே உருவியொன்றாய் நின்றநூலுஞ் சொல்லத்தக்க முறைமையிலே கோத்த மணிகள் பலநிறமாகப் பேதித்து ஒரு நூலிலே நின்றமையும்போலப் பிரமத்துக்கும் பிரபஞ்சத்துக்கும் உவமைகூறினாய்; அங்ஙனங் கூறிய உவமையால், கர்த்தாவானவன் ஒருவனாய்ப் பலபேதப்பட்டு எண்ணிறந்த யோனிகள் தோறும் நின்றவன் பேதியா நிலையே கூறினையாகையால், மணிகள் பேதம்போலப் பிரபஞ்சம் பேதமாகவுள்ளது பிரமத்துக்குப் பேதமிலதாம். ௧௨

ஒத்து நின்றுடலின் இன்ப துன்பமவை உற்றும் உற்
றிடுவ தின்றெனும், பித்த உன்னுரையின் உற்ற தேயிலது
பெற்ற தின்றிலது பெற்றதேல், துய்த்த லென்னுறுதல் சீவ
பாவமது சொல்வி னென்றி னுந்தோய் விலாமைநீ, வைத்து
நித்தமன வாக்கி றந்தபர மென்ன மானமிலை இன்னமே.

(உரை) அஞ்ஞானமாகிய காயத்தோடு கூடிப் பிரமமும் அஞ்ஞானமாய்ச் சுகதுக்கங்களை அநுபவித்து நிற்கவும், பிரமங் காயத்தோடு கூடுவதில்லையென்று சொல்லும் பேயனே நீ அநுபவமில்லையென்னும் வார்த்தை; உன் சாத்திரத்திலேயும் பொருந்தினதே; சாத்திரத்தினன்றி அநுபவத்தினுமன்றி உண்டானதன்று; அஃதன்றியும், அநுபவத்தினுமின்றி உண்டானதாயின், பிரத்தியக்ஷத்திலே நீ அநுபவத்தை யுறுவானேன்; பரமான்மா அநுபவிப்பதில்லை ஜீவான்மாவினுடைய பாவனையென்று நீ கூறின், இப்படி அநுபவிக்கிற ஜீவான்மாவை ஒன்றினுந் தோய்விலாத பரமான்மாவாகக் கொண்டு நித்தமாய் மனவாக்கிறந்ததென்றும் அகம்பிரமமென்றுஞ் சொல்ல உனக்கு இன்னமும் நாணமில்லை. ௧௩

எங்கும் நின்றிடில் அவத்தை யின்றிடும் இசைந்தி டுங்
கரண மென்னில்நீ, அங்கு நின்றபரம் எங்கொ ளித்ததது
நின்ற தேல்அவை அடங்கிடா, இங்கு நின்றதொரு காந்த
மானகல் இரும்பு சந்நிதிஇ யங்குநேர், தங்கி நின்றதெனில்
நீங்கி மீளும்வகை தங்கி டாதுனுரை தப்பதே. ௨௪௮

(உரை) பிரமம் ஜீவான்மாவாய்க் காயந்தோறும் நிறைந்து நிற்குமென்று கூறின், நீ கூறிய அவத்தையிலகப்பட்டு அடங்குவதில்லையாம்; அப்படி யவத்தைப்படுவது ஜீவான்மா [illegible]

187112

னது சம்பந்தமென்று நீ கூறின், கரணங்கள் அவத்தையைப் பொருந்தினவிடத்தே அவ்விடத்துநின்ற ஜீவான்மா எங்கே மறைந்துநின்றது ; அந்தக்கரணம் நாயகனுகிய ஜீவான்மா அவ்விடத்து நின்றதாயின் அவன் வழித்தாய கரணங்களும் அடங்கமாட்டா ; அற்றன்று, இவ்விடத்துண்டானதொரு காந்தக் கல்லின் சந்நிதியிலே இரும்பு அசைந்தடங்குந் தன்மைபோல, ஜீவான்மாவின் சந்நிதியிலே அந்தக் கரணங்களுஞ் சேட்டைப்பட்டடங்கின வென்று நீ கூறின், நீ கூறிய இரும்பு காந்தத்தோடு கூடினுற் காந்தத்தை இரும்பு நீங்கமாட்டாத தன்மைபோல, அந்தக்கரணங்களும் ஜீவான்மாவோடு கூடினுல் நீங்கப்படாதாகையால், நீ கூறிய உவமையும் பிறழ்ந்ததாம். ௧௪

இருள்பொ திந்ததொரு பரிதி இவ்வுலகில் இசையில்
இன்றுடலம் நானெனும், மருள்பொ திந்ததொரு பிரம மிங்
குளது மருவி நின்றஉரு ஒருவியே, தெருள்பொ திந்துபரம்
நானெ னும்தெளிவு சென்றபோதுகதி யென்றிடும், பொருள்
பொ திந்ததெனில் அமல னுக்குமலம் வருத லாலுளது
புன்மையே. ௨௪௯

(உரை) இருளான் மூடப்பட்டதோர் ஆதித்தன் இந்த உலகின் கண்ணுண்டாகி நின்றதனை யொக்கும் காயங்கள்தோறும் நானென்று மருட்சியாலே மூடப்பட்ட பிரமம் இவ்விடத்துண்டாய் நின்றது ; அப்படி மருட்சிபொருந்தி நின்ற காயம் நீங்கி, அறிவு சூழப்பட்டுப் பரப்பிரமம் நானேயென்னுந் தெளிவுண்டானபொழுது முத்தியாய் நிற்கும்பொருளுந் தானுமென்று கூறின், மலரகிதமாகிய பிரமத்துக்கு மலங்கூடுதலும் நீங்குதலும் உண்டாகையாமென்று நீ கூறியவுரை வெளிற்றுரை.

உளதுபுன்மையே என்பது - நின்மலமாயிருக்கிற பிரமத்துக்கு மலமானது கூடுதலால் ஆபாசமாகை யுண்டாமென்க. இது கூடாதென்பது கருத்து. ௧௫

சுத்த மானதுப ரத்தி னுக்கனைவ தின்று சுத்தமத
நாதிநீ, வைத்த மாயமுறு சித்து அசுத்தமுற மற்ற தற்கு
மலம் வைத்தனை, ஒத்த சீவன்மல கன்ம மாயையுறு கின்ற
காரணமு ணர்ந்திடாய், பித்த னேவிறகி னிற்பி றப்பதெரி
யென்னில்வே றுபொருள் பெற்றதே. ௨௫௦



(உரை) பரப்பிரமத்துக்குப் புதிதாகச் சுத்தமுண்டாயதன்று அநாதியே சுத்தமுள்ளது; நீ ஜீவான்மாவென்று பிரமத்திலே பேதித்துச் சொல்லப்பட்ட சித்தானது மயக்கமுற்று அசுத்தத்தைப் பொருந்தவே அதன் பேதமாகிய பரப்பிரமத்துக்கு மலமுண்டென்று தோற்றுவித்தனை, காயத்தோடு பொருந்தின ஆன்மா மலமுங் கன்மமும் மாயையுங்கூடி அநுபவிக்குங் காரியத்துக்குக் காரணமாகிய முதலை அறியாயாதலால், நீ பேயனே. அற்றன்று, காட்டத்திலே அக்கினி மறைப்புண்டு நின்று பிரகாசித்தாற்போல, காயத்திலே மறைப்புண்டு நிற்கும்பொழுது ஜீவான்மாவென்று நின்று பிரகாசிக்கும் பொழுது பரப்பிரமமாகநின்று பிரகாசிக்குமென்று கூறின், ஓரக்கினி இரண்டாகப் பிரிந்து காட்டத்திலே நிற்பதன்றி வேறொரு பொருளாய்த்தோன்றுமாபோல ஜீவான்மாவும் வேறொரு முதலென்றறிவாயாக.

வேறு பொருள்பெற்றதே என்பதற்கு - விறகில் நெருப்புத் தோன்றுந் தன்மை யென்பையாகில், அந்நியப் பொருளைக் காட்டி நிற்கும். ௧௬

உன்னின் நீயும் அநுபோக மென்றபொழு துற்றி டும்
துவிதம் மற்றதிங்(கு), என்னில் இல்லையெனில் இல்லை நீயுமறி
வின்மை கண்டஇடம் உண்மையேல், மன்னு மோருணர்வு
வந்தி டும்முணர்வெ லாமு மாயையெனில் மாயையே,
சொன்ன தோர்பிரம மாயி டும்பிரமம் மாயை யாய்அறிவு
சோருமே. ௨௫௧

(உரை) நானே நானுயநுபவிப்ப னென்னு மிடத்துப் பெறுவானும் அநுபவிப்பது முண்டாய் இரண்டாம், பெறுவானுக என்னிடத்திற் கண்டதில்லையென்னிற் பேறுகிய நீயும் இல்லையாம், அஞ்ஞானங் கெட்டவிடமே உண்மையென்று நீகூறின் அந்த மயக்கஅறிவு கெட்டுக் கூடுமிடத்தே ஆன்மஅறிவு சிறிதுண்டாயிருக்கும். அற்றன்று, அப்படி அறியும் அறிவெல்லாம் மாயையறிவாம் என்று கூறின், மாயை நீங்கினவிடத்திற்றேன்றும் அறிவும் மாயையறிவென்னின் அந்தப் பிரமம் மாயையாகவேண்டும். ஆகையால் பிரமமுமாயையாய் அம்மாயையாலே அறிவுங் கெடுமென்பதேயாம். ௧௭

ஆரணங்கள் தருதத்து வம்அசிப தங்களின்பொருள்
அறிந்திடாய், காரணம்அதுவும் நீயும் என்றிருமை கண்டு
வேறதின்மை கருதிடாய், நாரணன்பிரம னாலும் நாடரிய
நாயகன்கழல்கள் நண்ணிநீ, ஏரணைந்துபொலி சாதனங்கள்
கொடு யோக ஞானமும் இயற்றிடே. ௨௫௨

**(உரை)** வேதமுடிவிலே சொல்லப்பட்ட தத்துவமசி யென்னும் மகாவாக்கியத்தையும் அதனால் தரிசிக்கப்பட்ட பதபதார்த்தங்களையும் அறியாய், காரணமாகிய கர்த்தாவுங் காரியமாகிய ஆன்மாவும் இரண்டுபட்டு நின்றமையுங்கண்டு கூடிநிற்குமதுவும் அறிந்திடாய். ஆகையால் பிரமவிஷ்ணுக்களாலும் நாடுதற்கரிய கர்த்தாவினுடைய திருவடிகளைப் பொருந்துதற்கு அழகு பொருந்திப் பொலிவினையுடைத்தாகிய சிவ சாதனங்களையும் பொருந்திக்கொண்டு யோகஞானங்களை யறிந்து செய்வாயாக.

எனவே, யோகத்தாலே மனதைப் பிரித்து ஞானத்தாலே திருவடியைச் சேர்க என்பது கருத்தாம். ௧௮

---

## பாற்கரியன் மதம்

மன்னு மறையின் முடிவென்று மாயா வாதி உடன்மலைந்து
பின்ன மாகிப் பிரமத்தைப் பேதா பேதம் சாதித்துப்
பன்னு மொருநூல் அதுவாகப் பாரின் மீது பாற்கரியன்
சொன்ன இதனை இந்நூலின் அகத்தே தோன்றச் சொல்லுவாம்.

**(உரை)** சுவயம்புவாக நிலைபெற்ற வேதம் இத்தன்மைத்தென்று மாயாவாதியோடு மாறுபட்டு நீங்கி, மாயாவாதி கூறிய பிரமத்தைப் பேதமாகவும் அபேதமாக நிலைநிறுத்தி, ஓதுநூலும் வேதமுமாயிருக்க அதனுண்மையை யறியாது பூமிமீதே பாற்கரியன் சொன்னமதத்தை இச்சிவஞான சித்தியாரிடத்தே தெளியச் சொல்லுவாம்.

பாற்கரியன் என்பான் ஒரிருடி. பாற்கரியம் எனினும் பரிணம மாயாவாதம் எனினும் ஒக்கும். ௧

சித்தே உலகாய்ப் பரிணமித்துச் சீவனாகித் திகழ்ந்த
மையால், சத்தே யெல்லாம் முத்தியினைச் சாரக் கண்ட



ஞானங்கள், வைத்தே மொழியும் மாமறைகள் சொன்ன
மாபே வந்தக்கால், ஒத்தே கெட்டுப் பிரமத்தோ டொன்
றாய்ப் போமென் றுரைத்தனனே. ௨௫௪

**(உரை)** அறிவாகிய பிரமமே பிரபஞ்சபேதமாய்த் தோன்றி வளர்ந்து ஆன்மாக்களுமாய் விளங்குந் தன்மையால், சர்வமும் அந்தப் பிரமமேயாம், வீட்டின்பத்தைச் சேர அறியுஞானங்களை வேதவாக்கியங்கள் சொல்லும், அந்த வாக்கியங்களைச் சொன்னபடியே வைத்துத் தத்துவமசி பதபதார்த்தங் கண்டால் அந்தப் பிரமத்தோடே ஆன்மாக் கூடி ஆன்மத்தன்மை கெட்டொன்றிப் பிரமமாயே போமென்று பாற்கரியன் கூறினன்.

வாக்கியம் - தத்துவமசி. சத்து - நிலைநின்றது. அசத்து - நிலை நில்லாதது. ஆதலாற் சத்தே சர்வமுமா மென்பதவன் கருத்து. ௨

---

## பாற்கரியன் மத மறுதலை

இயம்பு கின்றதுல காயி டாதுசட மின்றி நின்றுசட
மாகியே, முயங்கு கின்றமையில் இலவணத்திரத முழுதுமே
கனதை முயல்கைபோல், பயந்த தென்னில்அறி யப்ப டும்
பொருளும் அறிவு மென்றுபல வாகுமோ, தியங்கு கின்ற
தெனு ரைத்தி டாய்கடின மாதி யாகிவரு சித்தனே. ௨௫௫

**(உரை)** நீ சொல்லுகின்ற பிரமம் பிரபஞ்ச பேதமாயிடமாட்டாது. ஆகையாலே, பிரமம் ஜடத்தை நீங்கிநின்றது ஜடந்தானுந் தானகவே கூடிநின்றமை உண்டாகாது. அற்றன்று, உப்பானது ஜலத்தோடுகூடி ஒரு தன்மைப்பட்டாற்போல, வத்துவும் ஒன்றாய் நின்றதென்னில், ஜலத்தோடு கூடிய இலவணம் பேதியாது ஏகத்துவமாய் நின்றாற்போல, பிரமமும் ஒன்றாய் நிற்கையின்றி அறியப்படும் பொருளாகிய ஜடமும் அறிவாகிய ஞானமுமாகப் பேதித்து நிற்குமோ, இப்படி மயங்குவானேன் சொல்லாய், மாபூதங்கள் முதலானவையும் நானே யாவேனென்று வரும் அறிவனே.

கடினம் - பூதகுணம். அது குணிமேல் நின்றது. இலவணத்திரத முழுதுமே கனதை முயல்கைபோ லென்றது - மண்ணின் சார

மானதை ஜலமானது கொண்டு உப்பான தொழியச் சிற்சொரூபந் திரண்டு பரிணமியாதென்பது நோக்கியாம். ௧

உன்னு கின்றபிர மத்தி லேசிறிதிவ் வுலக மானதென
ஓதினீ, மன்னு கின்றசில கால மோடழியும் அழிய வந்து
தவு மாயையால், தன்னி லொன்றுமெனில் வருத லோடிறுதி
தருத லால்அதுச டத்த தாம், உன்னொ டச்சகமும் உண்மை
யன்றுசட மென்ன வேஉறுதி மன்னுமே. ௨௫௬

(உரை) யாவரும் நினைக்கப்படா நின்ற பிரமஞ் சேரப் பிரபஞ்சமாகாது சிறிது பேதித்துப் பிரபஞ்சமானதென்று நீ சொல்லுகின்றாயாகில், அங்ஙனமாயிற் பிரபஞ்சஞ் சிறிதுகாலம் நிலைபெற்று நின்று அழியாநிற்கும். அப்படியழிந்து மீளவும் மாயையிலே தோன்றிவருகையால் மாயையிலே ஒடுங்கி மாயையிலே தோன்றும். அற்றன்று. ஒடுங்குங் காலத்திலும் பிரமத்திலேயொடுங்கித் தோன்றுங் காலத்திலும் பிரமத்திலே தோன்றுமென்னில், இப்படித்தோன்றி யொடுங்குவதாகிய பிரபஞ்சம் பிரமத்திலே பேதமாயில் பிரமமும் அசேதநமாக வேண்டுமாகையால், அகம்பிரமம் என்கிற உன்னுடனே பிரபஞ்சமுந் தோன்றுகையும் ஒடுங்குகையுஞ் செய்கையால் மெய்யன்று ஜடமென்றே சொல்லுதலை மெய்யாகவுடைத்து. ௨

வித்தெ ழுந்துமர மாய்வி ளைந்தமை விளம்பி னாய்
உவமை வேறுநீ, நித்த மென்றவுரை பொய்த்து நீடுசட
மாய்எ ழுந்தழியும் நின்பரம், ஒத்தெ ழும்பொழுது வித்தி
னுக்கவனி யுண்டு தாரகமு னக்கெனா, பித்த னென்றுல
குரைத்தி டும்பிர மமாயி னாய்இவைபி தற்றிலே. ௨௫௭

(உரை) மரங்கெட்டவிடத்து வித்திலேநின்று மரமுண்டானாற்போல, பிரபஞ்சம் அழிந்தவிடத்தும் பிரமத்திலேநின்று பிரபஞ்சமுண்டாமென்று உவமை கூறினாய். அங்ஙனமாயின், அந்தவித்து மரத்திலேயுள்ளதுமாய்ப் பின்புதானே பரிணமிக்குங் காலத்து மரந் தோன்றத் தான்கெட்டுத் தோன்றினதற்குப் பரிணாமமுண்டாய் அந்தமரம் மீளவும் வித்தையுண்டாக்கினாற்போல, பிரமமும் பிரபஞ்சத்துக்கு வேறாய் நித்தமாய் நிற்குமென்ற உரையும் பொய்யாய்ப் பிரமமும் பிரபஞ்சத்தையுண்டாக்கியும் பிரபஞ்சமும் பிரமத்தையுண்டாக்



கியும் சடத்தின் பகுதியாய்த்தோன்றிக் கெடும் நின்பிரமம். அதுவுமன்றி, அந்தவித்து மரமாம்பொழுது பூமிதரிப்பாகத் தோன்றும். அதுபோல, உன்னுடைய பிரமம் பிரபஞ்சமாம்பொழுது தரிப்பதியாது, பிரமமாயினாய் இப்படி மயங்கக் கூறுவையாயின் உன்னைப் பேயனென்று மிக்கோர் சொல்லாநிற்பார். ௩

சூட கம்கடகம் மோதிரம் சவடி தொடரொ டாரம்முடி
தோடுநாண், ஆட கந்தருவ தாகும் அப்படிய னைத்து மப்பி
ரம மாகுமேல், நீடும் அப்பணிகள் செய்து ளோர்அவைபு
னைந்து ளோர்களை நிகழ்த்திடும், நாடி டும்சகமி யற்று வோர்
கொடு நடத்து வோர்உளர்ந விற்றிலே. ௨௫௮

(உரை) சூடகமுதல் நாணீறாகச் சொல்லப்பட்ட பேதமான பணிகளைப் பொன்னொரு முதலாக நின்று பேதித்தாற்போல, பிரமமும் பிரபஞ்சபேத மெல்லாமாகப் பேதித்து முதல்கெடாமல் நிற்குமென்று கூறின், அப்பணிபோலப் பேதித்து எல்லாம் பிரமமாய் நிற்குமாகில், அப்பணிபேதஞ் செய்தோரையும் அப்பணி யணிந்தோரையும் அப்பணி தானேயுண்டாக்கி நிற்றலால் அதுபோல, ஒரு முதலைக் கொண்டு சகத்தை யுண்டாக்குவோரையும் அதனை நடத்துவோரையுஞ் சங்கரிப்போரையுஞ் சொல்லுங்காலத்து அறிந்திடுந் தன்மையையுடைத்து. ௪

அறிவி னோடுசெயல் மாறில் வீடதனை அணுகொ
ணாதவைஇ ரண்டினால், உறுதி யானபிர மத்தி னோடழிய
ஒன்ற லாமெனஉ ரைத்திகாண், இறுதி யேல்அதனொ டிசைவ
தின்றிசைவ துள்ள தாயிடின்அவ் வின்பமே, பெறுதி நீஉட
லொ டுயிர்க ளாய்அறிவு பிரியு மாறுசெயல் பெறுவதென்.

(உரை) ஞானக்கிரியைகள் மாறினால் வீட்டின்பம் அணைதற்கு அரிது; ஞானக்கிரியைகள் இரண்டினாலுஞ்சென்று அவற்றிற்காதாரமாகிய பிரமத்திலே அழியக் கூடலாமென்று கூறினாய்; ஞானக்கிரியைகள் நிற்கப் பிரமத்தைச் சென்று கூடுதலுமில்லை; அந்த ஞானக்கிரியைகள் கெட்டாற் பிரமத்தோடு கூடுதற்கு ஒரு முதலும் இல்லையாம்; அன்றி அந்த ஞானக்கிரியைகள் கெடாமலொன்றுவதுள்ளவாமாயின், நீ எப்பொழுதும் அந்தச் சுகத்தை அநுபவிப்பதன்

றிக் காயத்தோடு உயிர்களின் மிக்க அறிவு நீங்கும்படி அவத்தையின் செய்தியைப் பெறுவானேன்; ஆதலால், ஆன்மாவென்றும் ஒன்றுண்டு.

உடலோடுயிர்களாயது பிறக்குமாறு செயல்பெற்றியால் எனப்பாடமாயின், இன்பத்தைப் பெற்று நிற்றலன்றி நீயும் உடலோடு உயிர்களாய் வந்து பிறக்குமாறு பெற்றாயெனப் பொருள் கொள்க. இதனால் உலகமும் உயிருமாய்ப் பிறந்திறந்துழலும் அவனன்றோ நீயென்றதெனக் கொள்க. ௫

## நிரீச்சுரசாங்கியன் மதம்

மூலம் புரியட் டகம்விகிர்தி யாகி மூன்றாய்ப் பிரகிருதி
தூல சூக்கம் பரமாயச் சுத்த புருடன் சந்நிதியில்
பாலன் சேட்டை புரிந்துலகம் யோனி பலவாய்ப் பரந்தொடுங்கும்
சால வென்று நிரீச்சுவர சாங்கி யன்றான் சாற்றிடுமே. ௨௯௦

(உரை) பிரகிருதி புமானென்னும் இரண்டில், பிரகிருதியானது மூலமென்றும் புரியட்டகமென்றும் விகிர்தியென்றும் மூன்று பெயரையுடைத்தாய், தூலமாயும் சூக்குமமாயும் பரமாயும் நிற்கும்; புமானாகிய சுத்தபுருடன் பிரகிருதியின் சந்நிதியிலே மழவின் செய்தியைப்போல அறியாமையைப் பொருந்திப் பிரபஞ்சமும் யோநிபேதங்களும் நானெனவிரிந்து நின்றவிடத்து, தனக்கு விவேகஞானம்வந்து சர்வமும் பிரகிருதிக்குள்ளது தனக்குள்ளதன்றென்று காணவே, பிரபஞ்ச வியாபாரம் நன்றாக நீங்குமென்று, நிரீச்சுவரசாங்கியன் சொன்னான்.

மூலம் - சித்தம். புரியட்டகம் - சத்தாதிகள் ஐந்து மனம் புத்தி அகங்காரம் மூன்று ஆக எட்டாம். விகிர்தி - தூலதேகமும் பிரபஞ்சமும். இம்மூன்று வகையாகப் பிரகிருதி பேதிக்க இதனைப் புமான்றனதென்று கொண்டுநிற்பன். இந்தப் பதினாறு கருவிகளோடுங் கூடிப் பிரபஞ்சத்தைப் பிரகிருதிக்குள்ளதென்று நீங்கப் புமானென்றும் புருடனென்றும் வேறற்று நிற்பன். அதுவே முத்தியாம் என்பது கருத்து. நிரீச்சுரசாங்கியம் - கபிலன் மதம். இதில் விகிர்தியென்றமையால், ஆங்கார பேதத்திற்றோன்றிய ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும் சத்தாதிகளிற்றோன்றிய பூதங்களும் இருபத்துநாலு தத்துவங்களும் மற்றும் பேதமுமெனக்கொள்க. இதில் ஈசுரசாங்கியன் என்றும் நிரீச்சுரசாங்கியன் என்றும் இரண்டுவகையர். இதிலே சிவசாங்கியரையும் விஷ்ணு சாங்கியரையும் ஈச்சுர சாங்கியரெனக் கொள்க. ௧



## நிரீச்சுரசாங்கியன் மத மறுதலை

சுத்தன் அறிவன் புருடனெனில் சூழா தாகும் பிரகிருதி
பெத்தம் நீங்கி னாலும்பின் பெத்த னவன் பேரறிவால்
கத்த மேவும் பிரகிருதி கண்டு கழிக்க மாட்டானேல்
முத்த னாகான் சுத்தனுக்கு மூலப் பிரகி ருதியிலையாம். ௨௯௧

(உரை) ஆன்மபுருடன் சுத்தமான அறிவை யுடையனுமாகில் அவனை அசுத்தமாகிய பிரகிருதி வளையாதாகும். அன்றியும், பெத்தனாய் நின்றவிடத்தினும் இவனைப் பந்தியாது அஞ்ஞானம். அது பிரகிருதிக்குள்ளதாய் நிற்குமென்னில், பெத்தம் நீங்கினவிடத்திலும் அறியாமல் நின்றானாகையால், பெத்தத்தைப் பொருந்தினவனாவன்; மிக்க அறிவாகிய பரையோடுகூடி நின்றும் பொல்லாங்கைப் பொருந்தின பிரகிருதியின் செயலைத் தரிசித்து நீங்கமாட்டானாயின் அஞ்ஞானம் பிரகிருதிக்குள்ளதென்று காணுந் தகுதியையுடையனல்லனாகையால், பரையுடனே கூடிநின்று பிரகிருதியை நீங்கானாயின் முத்தியடையும் ஆன்மாவாகான். சுத்தனாயிருக்கிற பிரமத்துக்கு மூலப்பிரகிருதி யுண்டாகாது; மூலப்பிரகிருதி கூடுவதும் நீங்குவதும் ஆன்மாவுக்கென் றறிவாயாக. (கத்தம் - பொல்லாங்கு). ௧

புருடன் பிரகி ருதிபெற்றால் போதம் சிறிதங் குண்டாகிக், குருடன் முதுகின் முடவனிருந் தூர்ந்தாற் போலப் பிரகிருதி, இருட னிடத்தே இருந்தியங்கும் கன்மால் இறையன் றிரண்டினையும், மருட னுருவாய்ச் சேட்டிப்பித் தறியும் அமலன் அரனேயாம். ௨௯௨

(உரை) சுத்தபுருடனென்ற ஆன்மபுருடன் பிரகிருதியைக் கூடினவிடத்துப் பிரகிருதியாலே சிறிது அஞ்ஞான அறிவுண்டாய்,

அந்தகன் முதுகிலே முடவனிருந்து அந்தகனை நடாத்தினாற்போல, கன்மத்துக்கீடான பிரகிருதியாலே சிறிது அஞ்ஞானம்பெற்ற புருடனைப் பிரகிருதிகூடி அவனிடத்தேயிருந்து கன்மத்துக்கீடான தொழிலை நடாத்தும், ஆகையாற் பிரகிருதியுடன்கூடி நிற்பான் ஆன்மாவேயாம்; கர்த்தாவன்று. அந்த ஆன்மபுருடனையும் அவனைக் கூடிநிற்கிற பிரகிருதியையுங் கூட்டி அஞ்ஞானமே தனக்கு உருவமாகக்கொண்டு நடக்கும்படியாக நடாத்துவித்து ஆன்மாக்கள் செய்த கன்மத்தையும் அறிந்து அதற்குத் தக்க பயனையும் கொடுப்பான் மலரகிதனாகிய அரனே.

பிரகிருதிக்கு அஞ்ஞானமே சொரூபமாகையால் அவ்வஞ்ஞானத்தைப் பொருந்திநின்ற புருடனை மருடனென்று கூறப்பட்டது. அமலனென்கையால் கர்த்தா மலரகிதனென்பது கருத்து. புருடனுவான் பிரகிருதி கூடினாற் சிறிதறிவுண்டாய்க் குருடனுடைய முதுகிலே முடவனிருந்து நடாத்தினாற்போலப் பிரகிருதியாகிய குருடனிடத்தே புருடனிருந்து வழங்குங் கன்மத்தாலே வேறு கர்த்தாவா லன்றென்றெனில், அப்பிரகிருதி புருடனாகிய இரண்டையும் அருள்தன் உருவாய் நின்று சேட்டிப்பித் தறியாநிற்கும் அமலனாகிய பரமேசுவரனென்க. குருடன் முதுகில் முடவனிருந் தூர்கையாவது ஒன்றுக்குள்ள குணம் ஒன்றுக்கில்லாமல் சேட்டை கூடாதாம். ௨

அறியான் புருடன் பிரகிருதி அசேத நம்கா ரியத்தி
னுக்குக், குறியாய் நாதன் உளனென்று கூறு முத்தி விவேக
மெனில், செறிவாம் தனைபோ காதறியில் சேர்த்தோன்
வேண்டும் செயலிற்போம், நெறியால் பணிசெய் துடற்பாசம்
நீக்கிக் கொள்நீ நின்மலனால். ௨௯௩

(உரை) ஆன்மபுருடன் தானையொன்றையும் அறியமாட்டான். பிரகிருதியுஞ்சடம்; ஆதலால், இவை காரியப்படுதற்குக் காரணமாகிய கர்த்தா ஒருவனுளனென்று குறிப்பாயாக. நீ முத்தியென்று சொல்லப்பட்டது பந்தம் நமக்குள்ள தன்றென்றறியும் விவேகஞானமென்னில், எல்லாவற்றையும் அறியுமிடத்துப் பாசஞானமும் பசுஞானமுங்கூடி அறியவேண்டுமாகையாற் பாசபந்தம் நீங்காதாம். அந்தப் பாசம் நீங்குமிடத்து முன்பு கூட்டினானே நீக்கவேண்டும். அந்தப் பாசத்தைக் கூட்டின கர்த்தாவின் காருண்ணியத்தாலே பாசபந்தம் நீங்கும். அது நீங்கும்படிக்குச் சரியை கிரியா யோக ஞானங்களாகிய வழிகளிலே நின்று தொண்டுசெய்து நீ கர்த்தாவினாலே உன் பாசபந்தத்தை நீக்கிக்கொள்வாயாக. ௩



---

## பாஞ்சராத்திரி மதம்

ஆதியாய் அருவ மாகி அகண்டபூ ரணமாய் ஞானச்
சோதியாய் நின்ற மாயன் சுவேச்சையால் உருவு கொண்டு
நீதியார் கருணை யாலே நீள்கடல் துயின்று நூலும்
ஓதினா னென்று பாஞ்ச ராத்திரி உரைப்ப னுற்றே. ௨௯௪

(உரை) ஆதிபூதனாய் அரூபியாய் எவ்விடத்தினும் நிறைந்து நிற்பவனாய் ஞானசொரூபியாய் நின்ற விஷ்ணுவானவன், ஆன்மாக்களை இரக்ஷிக்கவேண்டித் தனதிச்சையாலே மீன் முதலான திருமேனிகளை எடுத்துக்கொண்டும், இரக்ஷிக்கவேண்டும் முறைமையாகப் பொருந்தின கருணையாலே நெடிய திருப்பாற் கடலிலே யோகநித்திரைசெய்தும், அநாதியாகிய வேதத்தையும் அருளினானென்று, பாஞ்சராத்திரி யென்னும் சமயி சொல்லுவன். ௪

உந்தியில் அயனை யீன்றும் அவனைக்கொண் டுலகுண் டாக்கி
அந்தநல் லுலக ழிக்க அரனையும் ஆக்கு வித்துத்
தந்திடுஞ் சகத்தி னுக்குத் திதிகர்த்தா தானே யாகி
வந்திடும் தோற்றம் ஈறும் நிலைமையும் பண்ணும் மாயன்.

(உரை) வைகுண்டத்திலே யிருக்கும் பரமபுருடன், சிருஷ்டி காரணமாகத் தனது திருவுந்தித் தாமரையிலே பிரமாவை யுண்டாக்கி அவனாலே பிரபஞ்சத்தை உண்டாக்குவித்தும், அப்படி அழகு பெறப் படைத்த பிரபஞ்சத்தைச் சங்கரித்தற்குப் பிரமாவினிடத்திலே நின்றும் உருத்திரனை உண்டாக்கி அவனைக் கொண்டு சங்கரிப்பித்தும், தன்னாலுண்டாக்கப்பட்ட பிரபஞ்சத்துக்கு இரக்ஷிக்குங் கர்த்தாவுந் தானேயாகி, இப்படி வரப்பட்ட சிருஷ்டி திதி சங்காரங்களையுஞ் செய்பவன் பரம புருஷோத்தமனென்று பாஞ்சராத்திரி சொல்லுவன்.

பஞ்சராத்திரியில் நூல்செய்கையால், பாஞ்சராத்திரி யென்று பெயராயிற்று. அரனையும் ஆக்குவித்தென்றது - பிரமாவின் முகத்திலே அரனைத் தோற்றுவித்தது. ௨

மீன்ஆமை கேழல் நார சிங்கம்வா மனனாய் வென்றி
ஆனாத இராமர் மூவர் ஆயனாய் அளித்தான் கற்கி
தானாயும் வருவன் இன்ன மென்றவன் சாற்றித் தேவர்
கோனாயும் நிற்ப னென்று கூறுவன் குறிப்பி னோடே. ௨௯௬

(உரை) பிரபஞ்சத்தை இரக்ஷிக்கவேண்டி மீனாகியும் ஆமையாகியும் பன்றியாகியும் நாரசிங்கமாகியும் வாமனனாகியும், வெற்றி கெடாத பரசுராமனாகியும், பலபத்திர ராமனாகியும், ஸ்ரீ ராமனாகியும், கிருஷ்ணனாகியும் இரட்சித்தான். மேற்குதிரையாகியும் வந்திரக்ஷிப்பனென்று பாஞ்சராத்திரி சொல்லி, இப்படித் தசாவதாரங் கொள்ளும் போதும் முத்திதேவன் தேவர்களுக்குக் கர்த்தாவுமாயிருப்பனென்று அறிவோடுஞ் சொல்லா நிற்பன். ௩

ஏழ்கடல் செலுவில் ஏற்றும் இருங்கிரி முதுகில் ஏற்றும்
தாழ்தலம் முழுதுங் கண்டும் தபநியன் உடல்பி ளந்தும்
வாழுல களந்தும் மன்னாய் மன்னர்க்கு மன்ன ராயும்
பாழ்பட உழறிப் பாரும் நோக்கும்பின் பரியு மாயே. ௨௯௭

(உரை) மச்சரூபமாய்ச் சத்தசமுத்திரங்களையும் ஒரு செலுவிலே அடக்கியும், அமுதமர்த்தநத்திற் கூர்மரூபமாய் மகாமேருவை முதுகிலே தாங்கியும், பிரளயத்திலே தாழ்ந்துபோன பூமியை வராகரூபமாய்ப் புகுந்தெடுத்தும் நாரசிங்கரூபமாய் இரணியவதை செய்தும், வாமனரூபமாய் வாழ்கின்ற உலகளந்தும், இருபத்தொருகால் க்ஷத்திரியரைச் சங்கரித்து மண்டலகாபியாய்ப் பரசுராமனாகியும், இராமனாய் இராவணனை வதைசெய்தும், பலபாத்திராமனாய் லோகரக்ஷார்த்த மாயோகத்தினின்றும் வாசுதேவனாய் அசுரர் மாயை பாழ்படச் சிதறியும் பிரபஞ்சத்தை இரக்ஷிக்கும், இனிவரும் பிரளயகாலத்துக்குக் குதிரையாய் வந்திரக்ஷிக்குமாயன்.

மன்னர்க்கு மன்னராயும் என்றது - இராமாவதார மூன்றிலும் பொருந்தாத இராசாக்களை வென்று அவர்களுக்கு இராசாவாயும் இருந்ததென்க. ௪



பொய்கைவாய் முதலை வாயில் போதகம் போத மாட்டா(து)
ஐயனே நாதா ஆதி மூலமே என்ற ழைப்ப
உய்யயாம் பணிமால் ஓல ஓலவென் றோடிச் சென்று
வெய்யவாய் முதலை வீட்டிக் கரிக்கும்வீ டருளி னானே. ௨௯௮

(உரை) பொய்கையிடத்தில் தங்கிய யானை அப்பொய்கையின்கண் உண்டாகிய முதலைவாயிலே அகப்பட்டுக் கரையேறமாட்டாமல், சுவாமியே கர்த்தாவே ஆதியே மூலமே என்று நொந்து கூப்பிட்டழைப்ப, யாம் ஈடேறும்படி வணங்கப்பட்ட பரமபுருடன் கிருபை செய்தோடிச்சென்று கொடிய வாயினையுடைய முதலைவாயினின்றும் விடுவித்து, அந்த யானைக்கும் முதலைக்கும் வைகுண்டபதம் அளித்தருளினான். ௫

அலைகடல் கடைந்தும் வானோர்க் கமுதினை அளித்துந் தீய
கொலைபுரி அசுரர் தம்மைக் கொன்றுல கங்கள் காத்தும்
கலைமலி பொருளன் பர்க்குக் கருணையால் உரைத்தும் மிக்க
தலைமையில் நிற்பன் மாய னென்றும்பின் சாற்றி னானே.

(உரை) தேவர்களுக்கு நித்தியத்துவம் உண்டாகவேண்டி மகாமேரு மத்தாகவும், வாசுகி நாணாகவும் சமுத்திரத்திலே அமுதமர்த்தனஞ்செய்து தேவர்களுக்கு அமுதங்கொடுத்தும், பிரபஞ்சத்திலே கொடிய கொலைத்தொழிலைப் பொருந்தின அசுரரைக்கெடுத்துத் தேவர்கள் முதலாகிய ஆன்மாக்களை இரட்சித்தும், சர்வகலைகளும் பொருந்தின அர்த்தத்தைத் தனது கருணையாலே அடியவர்களுக்கருளியும், இப்படி மிக்க கர்த்திருத்துவங் குன்றாமல் நிற்பவன் பரமபுருடனென்று சொன்னான் பின்னும் பாஞ்சராத்திரி. ௬

மாயையாய் உயிராய் மாயா காரிய மாகி மன்னி
மாயையாற் பந்தஞ் செய்து வாங்கிடும் அவனை லன்றி
மாயைபோ காதென் றெண்ணி மாயனை வணங்கப் பின்னை
மாயைபோம் போனால் மாயன் வைகுண்டம் வைப்பனன்றே.

(உரை) பரமபுருடன் பிரபஞ்ச சிருஷ்டி காலத்தில் மாயாசொரூபியாய்த் தன்வழி மயங்கும் ஆன்மாக்களுமாய் அவ்வான்மாக்களைப் பந்திக்குந் தத்துவ ஜாலங்களுந் தானேயாய் நிலைபெற்று, அம்மாயையாலே ஆன்மாக்களைப் பந்தித்து மீளவும் நீக்குவன் மாய

னாகையால் அவனாலன்றி மாயை நீங்காதென விசாரித்து, பதிவிரதை யைப்போல மற்றொரு தெய்வத்தை நினையாமற் பரமபுருடனையே வணங்கி வழிபாடுசெய்யவே அந்தப் பந்தமாகிய மாயை நீங்கும். அம்மாயை நீங்கவே, பரமபுருடன் விரசையாற்றின் இடத்ததாகிய நன்னீராலே ஆன்மாவைச் சுத்தமாக்கி வைகுண்டத்திலே சாரூப்பிய மாக வைப்பனென்று பாஞ்சராத்திரி கூறினான். ௭

## பாஞ்சராத்திரி மத மறுதலை

ஆதிதா னாகில் ஆதிக்(கு) அந்தமுண் டாகும் அந்தக்
கோதிலான் இறைவ னென்று கூறிடும் வேதம் ஞானச்
சோதியாய் நின்றா னாகில் தோய்ந்திடான் மாயை ஞானத்
தீதிலா உருவ மென்னில் சேர்ந்திடான் தாதுச் சென்றே.

**(உரை)** பாஞ்சராத்திரீ! நீ உன் கர்த்தாவை ஆதியென்று கூறி னாய்; அங்ஙனம் ஆதியாயின் ஆதிக்கு முடிவுண்டாய்க் கர்த்தாவும் அல்லனாவன். அஃதியாங்ஙனமென்னில், வேதநூலும் ஆதியும் அந்த மும் இல்லாதவனே கர்த்தாவென்று சொல்லாநிற்கு மாதலால் ஞானப்பிரகாசமாயும் அரூபியாயும் பரிபூரணமாயும் நின்றானாயின், மாயையினகப்பட்டு மாயாரூபமாகான். அற்றன்று, அப்படி எடுத் துக்கொண்ட திருமேனிகளும் குற்றமில்லாத ஞான சொரூபமே யென்னில் அவன் ஞானசொரூபியாயின் அந்த ஞானஸ்வரூபத்துக் குத் தாதுக்களுண்டாகா; இவனெடுத்துக்கொண்ட வடிவெல்லாந் தாதுக்களுண்டாய்ச் சங்காரப் படுகையாற் கர்த்தாவல்லன். ௧

தாதுவா னதுவ தென்னில் சங்கரன் பலிக்குச் செல்லத்
தீதிலாக் கோதண் டத்தைத் திறந்தவன் விட்ட போது
போதுவ துதிர மன்றோ போந்துமூர்ச் சித்து வீழ்ந்தான்
நாதனார் எழுப்பப் பின்னே நடந்தனன் கிடந்த வன்றான்.

**(உரை)** அவனுக்குத் தாதுக்களுண்டானபடி எங்ஙனமென்னில், பரமேசுவரன் விஷ்ணுவின் அகந்தையைக் கெடுப்பது காரணமாகப் பிக்ஷாபாத்திரம் வாங்கிப் பிக்ஷைசெய்ய அநேகம் பலிகளாற் பாத்திர நிறையாததால் அவ்விடத்துப் புருடோத்தமன் கருவத்தாலே யானி தனை நிறைப்பேனென்று நெற்றியின் நரம்பினைத் திறந்துவிடப்



புறப்பட்டது இரத்தமன்றோ? அந்த இரத்தம் போதுகையாலே விஷ்ணு மூர்ச்சித்துக் கிடப்பப் பிரமாதிகள் தோத்திரஞ் செய்யப் பரமேசுவரன் அருளிச்செய்தெழுப்ப எழுந்திருந்து பரமேசுவரன் பிறகே நடந்துசென்றான்; திருப்பாற்கடலிலே பள்ளிகொண்ட மூர்த்தியாகையால் தாதுக்கள் பரமேசுவரனால் உண்டென் றறிவா யாக.

பரமேசுவரன் பிக்ஷைக்கெழுந்தருள விஷ்ணுவின் அம்ஸமாகிய விண்டுசேனன் துவாரத்தே நின்று தகையப் பரமேசுவரனோடு போந்த காலவேகர் என்கிற பூதர் அந்த விண்டுசேனனைப் பிடித் தடித்துத் திரிசூலத்தே ஏற்றினார். அந்த ஆரவாரத்திலே விஷ்ணு எழுந்திருந்து ஈசுவரனை நமஸ்கரித்து இலலாடத்தைத் திறந்து கபா லம் பூரணமாக்கக்கடவேனென்று உதிரம் விட, அவ்வுதிரம் பாதிக் கபாலமும் நிறைக்கப்பெறாமலே மூர்ச்சித்து வீழ்ந்தான்; பின்பு ஈசுவரன் அவன் பத்திகண்டு பிரியப்பட்டுப் பலங்கொடுக்க, எழுந் திருந்து பின்னே சென்றானென்பது நூல் வரலாறு. ௨

இச்சையால் உருவங் கொள்வன் அரியெனில் இகழ்வேள் விக்கண்
எச்சனாய் உண்ணப் புக்கங் கிருந்தஅன் றீச னாலே
அச்சமார் தலைய றப்புண் டான்தலை யாக்கிக் கொள்ளான்
நச்சினார் போற்ற நாதன் நாரணன் தலைகொ டுத்தான். ௨௭௩

**(உரை)** புருஷோத்தமன் சுவேச்சையாலே உருவெடுத்துக் கொண்டானென்னில் பரமேசுவரியை இகழப்பட்ட வேள்வி யிடத்தே எக்கிய மூர்த்தியாய் அவிகொள்ள இருந்தஞான்று, வீரபத் திர தேவர் அச்சமுண்டாம்படி தலையறுப்ப, அந்தத் தலையிழந்த விடத்துத் தலையுண்டாக்கிக் கொள்ளாதவனானான். பின்பு பத்தராகிய தேவர்கள் புகழ, நாரணனுக்கு மீளவும் பரமேசுவரனே தலையையுண் டாக்கினான் ஆதலால் சுவேச்சையால் உருவெடுத்தானென்று சொல்வாயல்லை. ௩

நூலினை உரைத்து வேத நூலினை நுவலும் வண்ணம்
மால்அருள் செய்தா னென்றாய் மறைநீதி உலகி யற்கை
சாலவே தெரியா தாகிக் கிடந்தநாள் சகத்தி யார்க்கும்
ஆலின்கீ ழிருந்து வேதம் அருளினான் அறைந்தான் நூலே.

(உரை) நூலினை உரைத்து வேத நூலினை நுவலும் வண்ணம் மால் அருள் செய்தானென்றாய் - புருஷோத்தமன் வேதத்தையும் அருளிச்செய்து அந்த வேதநூலில் ஆராயும் பொருள்களையும் அருளிச்செய்தானென்று கூறினாய்,—மறைநீதி உலகு இயற்கை சாலவே தெரியாதாகிக் கிடந்தநாள் சகத்து யார்க்கும் ஆலின்கீழ் இருந்து வேதம் அருளினான் அறைந்தான் நூலே - வேதநூலொழுங்கும் உலகவியற்கையுந் தெரியாதாகித் தலைமயங்கிக் கிடப்பப் பிரபஞ்சத்துள்ளோர் யாவர்க்கும் பெரிதுந் தெரியவேண்டி வடவிருக்ஷத்தின் கீழிருந்து வேதநூலை அருளிச்செய்து அதன் பொருள் தெளியவேண்டி ஆகமநூலும் அருளினான் ஆதலால், பரமேசுவரனாலே உண்டாக்கப்பட்டன வேதாகம புராணங்களாம். ௪

அயன்றனைப் பயந்தா னென்றாய் அரிஅயன் சிரஞ்சே திப்பப்
பயந்திடான் தலைமால் தானும் படைத்திடான் சிரத்தைக் கிள்ளும்
சயந்தரும் அரனைத் தந்தான் அயனென்கை தப்பே யன்றோ
தியங்கிடா துணராய் எல்லாஞ் சிவன்செய லென்று தேர்ந்தே.

(உரை) பிரமாவைப் புருஷோத்தமன் படைத்தானென்று கூறினாய், பிரமாவைப் புருஷோத்தமன் படைத்தானென்று கூறின் அஞ்சுமுகமுடைய மாதலாலே நாமும் பரமேசுவரனுக் கொப்போமென்று கருவித்தவிடத்துப் பிரமாவினுடைய நடுத்தலையைப் பரமேசுவரன் அறுக்கக்கண்டு நின்ற பிதாவாகிய விஷ்ணு பயப்படானாய்ப் பிரமாவின் தலையை உண்டாக்கமாட்டுகிலன். பிரமாவின் தலையைக் கிள்ளத்தக்க வெற்றிபெற்ற பரமேசுவரன் கர்த்தாவல்லனாய்த் தலையிழந்த பிரமா பரமேசுவரனைப் படைத்தானென்பது தவறன்றோ ? ஆதலால், எல்லாம் பரமேசுவரன் செயலேயென்று விசாரித்து மயங்காமல் அறிவாயாக. அதற்குக் காரணம் மேலே சொல்லாநின்றோம். ௫

சீவன்கள் சநநம் போலச் சிலர்வயிற் றுதித்த மாலைத்,
தேவென்றே உலகங் காக்கச் சுவேச்சையாற் சநித்தா னென்
பீர், பூவன்பின் படைக்க மாட்டா தரனடி போற்ற வேதக்,
கோவந்து முகத்தில் தோன்றிச் சிருட்டியைக் கொடுத்தல் கூறும். ௨௭௬



(உரை) ஆன்மாக்களது பிறப்புப்போல யோனிசாதனனை புருஷோத்தமனைப் பிரபஞ்சத்தை இரட்சிக்கவேண்டிச் சுவேச்சையாலே உருவெடுத்துக் கொண்டானென்றும் அவனிடத்திலே பிரமாதோன்றிப் பிரமாவாலே பிரபஞ்சந் தோன்றிற்றென்றுங் கூறுவீர். சர்வசங்காரஞ்செய்து பரமேசுவரன் மீளவும் பிரமா முதலான காரணேசுவரரை யுண்டாக்கிப் பிரபஞ்ச சிருஷ்டி செய்விக்கப் பிரமாவும் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்க அறியாமல் மயங்கிப் பரமேசுவரனை நோக்கித் துதிக்கவே வேத கர்த்தாவான பரமேசுவரன் பஞ்சகிருத்திய நடப்பிப்பது காரணமாகப் பிரமாவின் நெற்றியிலே தோன்றிப் பிரமாவுக்குச் சிருஷ்டியை யுண்டாக்கிக் கொடுத்தலைச் சர்வ புராணங்களுஞ் சொல்லும் ஆதலால் பரமேசுவரன் பிரமாவாலே தோற்றப்பட்டவனல்லன் என்றறிவாயாக. ௬

நாரணன் அயனை யீன்றும் அயனும்நா ரணனை யீன்றும்
காரணம் ஒருவ ருக்கங் கொருவர்தாம் இருவ ருக்கும்
வாரண முரித்த வள்ளல் காரண னென்று மன்ற
ஆரணம் உரைக்கும் டக்கத் தவர்களும் அடைந்தா ரன்றே.

(உரை) நாரணன் பிரமாவை யுண்டாக்கியும், பிரமா நாரணனை யுண்டாக்கியும், ஒருவருக்கொருவர் காரணமாய்க் காரியப்பட்டுவருவர். அப்படி ஒருவருக்கொருவர் காரியப்பட்டு வருதற்கு முதற்காரணமாவான் யானையையுரித்துப்போர்த்த பரமேசுவரனென்றே தெளிய வேதஞ் சொல்லாநிற்கும். பரமேசுவரன் காரணமாகையாலே விஷ்ணு வலப்பாகமும் பிரமா இடப்பாகமுமாக அடங்குவார்கள் அநாதியே. ௭

அழிப்(பு)அரி யேவ லென்றாய் அரிதனை யழிக்கும் அன்றங்(கு)
அழிப்பது தவிர்க்க மாட்டான் அங்கமும் அழித்தே பூண்டான்
அழிப்(பு)அரி யேவ லென்றங் கறைந்ததும் அழிந்த தன்றோ
அழித்திடும் அரனே ஆக்கம் நோக்கமும் ஆக்கு வானே.

(உரை) சங்காரம் புருஷோத்தமன் ஆக்கினையென்றாய் அப்படியாயின், சர்வ சங்காரத்துப் பிரமவிஷ்ணுக்கள் முதலாகச் சங்காரப்பட விஷ்ணு தன்மேல் வாராமல் நீக்கிக்கொள்ளமாட்டான். அஃதன்றியும், பிரம விஷ்ணுக்களைச் சங்கரித்த - அவதாரங்களின் மீன் சேல் பன்றிக்கோடு சிங்கப்பல் ஆமையோடு கொக்கிறகு அன்னத்

தூவி முதலியன அணிகையாற் புருஷோத்தமனுக்கினையாற் சங்கரித்த தின்றித் தான் கர்த்தாவாய்ச் சங்கரித்தவனும். ஆதலால் சங்காரம் விஷ்ணுவினுடைய ஆக்கினையென்று கூறியதும் அழிந்ததாம்; சங்கரிப்பிப்பதும் பரமேசுவரனே யாகையாற் சிருஷ்டி திதிகளும் அவனாலே யுண்டாமென்றறிவாயாக. ௮

வானம்கீழ் மண்ணு மெல்லாம் மாயனே காப்பா னென்றாய்
தான்அஞ்சும் சலந்த ரன்தன் உடல்கீண்ட சக்க ரத்தை
ஆன்அஞ்சும் ஆடு வான்பாற் பெற்றுல களித்த வார்த்தை
தானெங்கு மாகு மெல்லாம் சங்கரன் காப்பே யாமே. ௨௭௯

(உரை) ஆகாசமுதற் கீழ்ப்பிருதிவி யீறாகவுள்ள பிரபஞ்சமெல்லாம் புருஷோத்தமனே இரக்ஷிப்பனென்று கூறினாய். சலந்தராசுரனுக்கு விஷ்ணு பயப்பட்டுப் பரமேசுவரனை நோக்கித் தவஞ்செய்ய அவ்விஷ்ணு தவத்தைக் கெடுக்கவந்த சலந்தரனைச் சக்கரத்தாலே பிளந்த பரமேசுவரனிடத்தில் அச்சக்கரத்தைப் பெறவேண்டிப் பரமேசுவரனை நெடுங்காலம் அர்ச்சித்தும் அவன் அநுக்கிரகஞ் செய்யாமையாற் பின்பு விஷ்ணு கண்ணை இடந்து மலராக அர்ச்சிக்கப் பஞ்சகவ்வியத்தில் மூழ்கும் பரமேசுவரன் மாட்டுச் சக்கரம்பெற்று அதனைக் கொண்டு மாலி சுமாலி மாலியவான் முதலாகிய அசுரரை வென்று பிரபஞ்சத்தை இரக்ஷித்தானென்னும் புராணம் பிரமாவாலே சொல்லப்பட்டுப் பிரபஞ்சமெங்கும் உண்டாயதாகையால், பிரபஞ்சத்தை விஷ்ணு இரட்சிப்பது பரமேசுவரன் இரக்ஷையேயென்றறிவாயாக. ௯

மாலினார் சேலி னாய்வா ரிகள்அ டக்கிக் கொண்டன்(று)
ஆலியா உலக மெல்லாம் அழிப்பவன் நானே என்னச்
சேலினார் தமைப்பி டித்துச் செலுவினை இடந்து கண்ணைச்
சூலியார் மேல ணிந்தான் சூலிதா னுகு மன்றே. ௨௮௦

(உரை) பிரளயகாலத்திலே பிரபஞ்சத்தை இரக்ஷிக்கவேண்டி மச்ச வடிவுகொண்டு சத்தசமுத்திரங்களையும் ஒரு செலுவிலே அடக்கினனென்று கருவித்துப் பிரபஞ்சத்துக்குச் சங்கார கர்த்தாவும் நானே யென்றுசொல்ல, விஷ்ணுவின் கருவத்தை யடக்கவேண்டி அந்த மச்சத்தைப் பிடித்துச் செலுவினையுங் கண்ணினையுமிடந்து



கூரிய திரிசூலத்தின் மேலே அணியாக அணிந்தான் சூலபாணியாகிய பரமேசுவரனாவான். ௧௦

ஆமையாய் மேருத் தாங்கி அடைகலாய்க் கிடந்த போது
நாமேஉ லகா தார நாதனென் றகந்தை பண்ண
ஆமேஉ ரன்று மென்னார் அமரரு மானார் பார்த்துத்
தாமநாள் ஆமை யாரைத் தகர்த்தோடு தரித்தா ரன்றே.

(உரை) ஒரு காலத்துப் பிரளயம் வந்து பிரபஞ்சத்துக்கு ஆதாரமாகிய மேருமலை சலித்தபோது புருஷோத்தமன் கூர்மரூபமாய் அம்மலையைத்தாங்கி ஆதார சிலைபோற் கிடந்து பிரபஞ்சத்துக்கு ஆதாரமும் அதற்குக் கர்த்தாவும் நாமேயென்று அகங்கரித்தவிடத்து, விஷ்ணுவின் கருவத்தைப் பார்த்தருளிக் கர்த்தாவாமென்றும் அன்றென்றுஞ் சொல்லாராய் அந்த நாளிலே ஆமையைத் தகர்த்து அந்த வோட்டை என்புமாலையோடணிந்தார் தேவரூபருமாய் அல்லருமாகிய பரமேசுவரர் ஆதலால் இவரே கர்த்தாவென்றறிவாயாக. ௧௧

எழுதலம் இடந்து பன்றி யாய்இருங் கொம்பி லேற்றுத்
தொழுதல கிறைஞ்ச நின்ற சோதிநா னென்ற போதன்(று)
அழுதல மந்து வீழ அருங்கோடு பறித்த ணிந்தான்
கழுதல மந்து காட்டில் ஆடிடுங் கடவு ளன்றே. ௨௮௨

(உரை) ஒரு பிரளயத்து விஷ்ணு வராகமூர்த்தியாய் அதல விதல சுதல தராதல இரசாதல மகாதல பாதாளம் என்னப்பட்ட எழு பூமிகளையுங்கீண்டு பெரியகொம்பிலே ஏற்றுக்கொண்டுநின்ற பராக்கிரமத்தினாலே பிரபஞ்சத்தார் புகழ்ந்து வணங்க நின்ற கர்த்தாயானல்லது வேறில்லையென்று கர்வித்தபோது, உடனே சோகத்தினால் துக்கித்துப் பூமியிலே விழும்படி அப்பன்றிக்கோட்டைப் பறித்து அணியாக அணிந்துகொண்டான் பேய் சுழன்றாடுங் காட்டில் ஆடலை விரும்பின கர்த்தா. ௧௨

இங்கடா வுளனோ மாலென் றிரணியன் தூணை எற்ற
உங்கடா மோத ரன்றான் உருநர சிங்க மாகி
எங்கடா போவ தென்ன உடல்பிளந் திறையா னென்ன
அங்கடா சிம்பு ளாகி யெடுத்தடர்த் தான் அரன்றான். ௨௮௩

(உரை) ஒரு காலத்திலே இரணியனாகிய அசுரன் இவ்விடத்தில் உங்கள் புருஷோத்தமன் உளனோவென்று தூணைத்தட்டிக் காட்ட, உங்கள் தாமோதரனாகிய புருஷோத்தமன் அந்தத்தூணிலே நாரசிங்க ரூபமாகித் தோன்றி இரணியனை ஏட இனி எங்கே போவாயென்று பிடித்து உடலைப் பிளந்தமையால் உண்டான கருவத்தாலே பிரபஞ்சத்துக்கு நாமே கர்த்தாவென்ன, அவ்விடத்துச் சிம்புளென்னும் வடிவுகொண்டு நாரசிங்கத்தை எளிதாகத் தூக்கிச் சங்கரித்துத் தோலை ஆசனமாகக் கொண்டான் பரமேசுவரன். கங

தானமென் றிரந்து செல்லத் தனக்குமூ வடிகொடுப்ப
வானமும் அளந்து கொண்டு மாபலி தன்னைப் பின்னை
ஈனமாஞ் சிறையி லிட்டான் இறையன்றென் றீந்தோர் தங்கட்(கு)
ஊனஞ்செய் திடுவோர் தாங்கள் உத்தம ரல்ல ராகும்.

(உரை) ஒருகாலத்திலே புருஷோத்தமன் வாமன வடிவு கொண்டு மாபலியிடத்திலே தானங்கொடுக்க வேண்டுமென்று இரந்து செல்ல, அவனுக்கு அவ்வரசன் தானமாக மூவடிமண் கொடுப்ப, தானம் பெற்றுப் பூமி யந்தர சுவர்க்கங்களை ஓரடியாலே யளந்துகொண்டு மற்றையடிக்கு இடமில்லாமைபற்றி மாபலியைக் குற்றமான சிறையி லிட்டானாதலால் அவன் கர்த்தாவல்லன். அஃதியாங்ஙனமென்னில், ஒருவர் ஒன்றனைத் தானஞ்செய்தால் அதனை ஏற்றுக்கொண்டவர் தானஞ்செய்தவருக்கு நன்மை செய்தலன்றித் தீமைசெய்வோர் உத்தமர் அல்லராதலால். கச

மாயமான் தன்னைப் பொய்ம்மா னெனஅறி யாத ரக்கன்
மாயையி லகப்பட் டுத்தன் மனைவியைக் கொடுத்தான் தன்னை
மாயைக்கு கர்த்தா வென்பை மதிகெட்டங் கவனைக் கொன்று
நாயனார் தமைப்பூ சித்தான் கொலைப்பாவ நணுகி டாதே.

(உரை) ஒருகாலத்திலே இராமனாய் அவதரித்து இலக்குமியுந் தானும் வனசரிதராயுள்ளநாளில், இராவணன் இராமனை நீக்கி இலக்குமியை அபகரித்துக் கொள்வான் ஒரு பொய்மானை ஏவ, அந்த மானை இராக்ஷதமாயை யென்றறியாமல் அம்மானின் பின்னே போய்த் தன்மனைவியைப் பிடிகொடுத்தானை மாயைக்குக் கர்த்தா வென்று கூறுவீர். இலக்குமி நீங்குகையாலே மயக்கத்தையுடையனாய் இலங்கையிற்சென்று இராவணனையும் அவன் சேனையையுங் கொன்று கொன்ற பாவம் நீங்கச் சேதுவிலே வந்து பரமேசுவரனை அருச்சித்து வினையைக்கெடுத்துக் கொண்டான் கர்த்தாவல்லன். கரு



பரசுடன் பிறந்தான் தானும் பத்தனாய்ப் பரசி னாலே
அரசறுத் தரனை நோக்கி அருந்தவம் புரிந்தான் அன்று
பரசிய பரசு ராமன் பலதேவ னுலக மெல்லாம்
உரைசெயும் உமையாள் கோனை உள்நினைந் தியோகி னின்றான்.

(உரை) ஒருகாலத்திலே விஷ்ணு மழுவுடன் பிறந்து பரசுராமனெனப் பெயரையுடையனாய்ச் சிவபத்தனாய் மழுவைக்கொண்டு அரசர்களையறுத்து அவ்விரத்தத்திலே ஸ்நானஞ்செய்து அந்தத் தோஷந்தீரப் பரமேசுவரனை நோக்கி அருந்தவம் புரிந்தான். அந்நாளில், பிரபஞ்சம் போற்றத்தக்க பலபத்திராமன் உயர்ந்தோரெல்லாம் வழிபாடுசெய்யும் உமையவள் மணாளனை ஞானக்கண்ணாலே கண்டு யோகத்தில் இருந்தே இராச்சியஞ்செய்தான். கசு

ஓதிய வாசு தேவர் தமைஉப மனியு தேவர்
தீதிலா நோக்கஞ் செய்து சிவகாஞ் சிரத்திற் சேர்த்தி
ஆதிபா லடிமை யாக்க அரிஉடல் பிராணன் அத்தம்
ஈதெலாம் கொள்நீ என்றங் கிறைஞ்சினார் அறிந்தி டாயே.

(உரை) புருஷோத்தமன் வாசுதேவராய்த் துவாரகாபுரியிலே இருக்க, வியாக்கிரபாத முனிவர் புத்திரராகிய உபமன்னியு மகாமுனிவர் கயிலாயத்துக் கெழுந்தருள, அவரை வாசுதேவர் கண்டு, “எங்கே எழுந்தருளுகின்றீர்” என்று கேட்ப, அவர், “கயிலாயத்துக்குப் போகின்றோம்” என்ன, வாசுதேவர் “கயிலாயத்திற்குச் செல்லாமல் இங்கே யாங்கள் தரிசித்துக்கொண்டிருப்ப அருள்செய்ய வேண்டும்” என்று வணங்க, உபமன்னியு மகாமுனிவர் குற்றமற்ற ஞானக்கண்ணாலே தீக்ஷிப்பித்து சிவஹஸ்தம் சிரத்தில் வைத்துத் தரிசிப்பித்து அவரைச் சிவபத்தராக்க, வாசுதேவர் ஞானபூரணராய் “என் சரீரம் அர்த்தம் பிராணன் இவையெல்லாங் கொண்டருள வேண்டும்” என்று தோத்திரஞ்செய்து வணங்கிக்கொடுத்துச் சிவபத்தராயிருந்தாரென் றறிவாயாக. கஎ

பின்வரும் பரிதா ணாகி அரியென்றாய் பின்பு வந்தால்
என்வரு மீச ணாலென் றறிகிலோம் இவுளி யார்க்கு
முன்வரும் அவதா ரங்கள் முடிந்தமை அறிந்தா யன்றே
பொன்வரும் சடையி னான்தன் புகழெங்கும் புக்க தன்றே.

(உரை) அந்த விஷ்ணு வருகிற யுகத்துக் குதிரையாக வருவனென்றாய் அப்படி வந்தாற் பரமேசுவரனாலே அக்குதிரைக்கு யாது வருமோ என்றறிகிலோம். முன்பு வந்த அவதாரங்களில் உண்டானமை நீ கேட்டறிந்தாய்; யாம் இங்ஙனஞ் சொன்ன முறைமையாற் பொன்போன்ற கொன்றைப்பூத் தரித்த திருச்சடாபாரத்தை யுடையவன் கீர்த்தியே எங்கும் விளங்கிற்று. கஅ

கைவரை மூல மேயோ எனக்கரிக் குதவுங் காட்டின்
மொய்வரை எடுத்தான் மூலம் ஆயிட வேண்டு மோதான்
ஐயனே முறையோ என்றால் அரசனோ அங்குச் செல்வான்
வையகங்காப்பான்செய்கை வழக்கன்றோஊர்காப்பான்போல்.

(உரை) ஒரு யானை மடுவின்கண் முதலைவாயின் அகப்பட்டு மூலமேயென்று கூப்பிட ஓடிச்சென்று அவ்வியானையினது இடரைக் கெடுத்தது கொண்டே வனத்தில் வரையை எடுத்து ஆனிரையைக் காத்த விஷ்ணு கர்த்தாவாயிட வேண்டுமோ? அவன் கர்த்தா வல்லன், இராஜாவை நோக்கி ஒருவன் முறையோவென்று கூப்பிட்டால், அம்முறை கேட்கச் செல்வோன் இராஜாவோ அன்றே? பிரபஞ்சத்தைப் பரமேசுவரன் ஆக்கினையினாலே இரக்ஷிப்பானாகிய விஷ்ணு ஓரான்மாவுக் கிடர்வந்தால் அதனைச் சென்றொழிக்கு முறைமை, அரசனதாக்கினையாலே ஊர்காப்போன் ஒருவர்க்குத் தீமைவந்த வழி அதனைச் சென்று தீர்ப்பதுபோலாம். கக

அன்றியும் ஆனை மாலுக் கடிமையாய் மூல மேயோ
என்றிடு மதனால் மால்தான் இறைவனென் றியம்ப வேண்டா
உன்றனக் கடிமை யானோர் உன்னையெம் பெருமா னென்றால்
இன்றுநீ வணங்கு முன்றன் எம்பெரு மானோ நீயே. உகூ0

(உரை) அன்றியும் விஷ்ணுவுக்கு யானை அடிமையானபடியாலே தன் கர்த்தாவை மூலமேயென்று கூப்பிட்டதாயின் அது கொண்டு விஷ்ணுவை மூலமாகிய கர்த்தாவென்று சொல்லவேண்டா.



உன்னடியான் உன்னை எம்பெருமா னென்றழைத்தால் இப்பொழுது நீ வணங்குகிற உன்னுடைய புருஷோத்தமனுவையோ நீ அன்றே? ஆதலால் யாவர்க்கு மூலமென்பது பரமேசுவரனே யாம். உ0

ஞாலம்உண் டவனால் உண்டார் நல்லமு தமரர் என்றாய்
வேலைநஞ் செழுமா லாதி விண்ணவர் வெந்து சென்ற
காலமின் றெமக்குக் காவாய் கடவுளே யென்ன நாதன்
ஆலமுண் டிலனேல் தேவர் அமுதமுண் டிடுவ தெங்கே. உகூக

(உரை) பூமியை விழுங்கிய சாமர்த்தியத்தை யுடையவனாலே தேவர்கள் நல்ல அமுதத்தைப் புசித்தார்களென்றாய்; சமுத்திர மர்த்தநத்திலே விஷம் பிறக்க, விஷ்ணு முதலாகிய தேவர்களெல்லாம் உஷ்ணம்பொறுக்கமாட்டாமல் ஓடிவந்து "அகால மரணம் எங்களுக்கு இன்று சம்பவித்திருக்கிறது; எங்களை இரட்சித்தருளவேண்டுங் கர்த்தாவே" என்ன, பரமேசுவரன் கிருபைபண்ணி அவ்விடத்தை அமுது செய்திலனாயின் விஷ்ணு முதலிய தேவர்களெல்லாம் பிழைத்துப் பின்பு அமுதத்தை யுண்டாக்கி அதனையுண்பது எங்ஙனஞ் சொல்வாய்? உக

அஞ்சியன் றரிதா னோட அசுரனைக் குமா னாலே
துஞ்சுவித் தொருபெண் ணாலே தாரகன் உடல்துணிப்பித்(து)
அஞ்சிடப் புரம்தீ யூட்டிச் சலந்தர னுடல்கீண் டோத
நஞ்சினை யுண்டு மன்றோ நாயகன் உலகங் காத்தான். உகூஉ

(உரை) சூரபத்மாவுக்குப் பயப்பட்டு விஷ்ணு திருப்பாற்கடலை நீங்கியோடிப் பரமேசுவரன்பால் முறையிடச் சுப்பிரமணியக்கடவுளை யுண்டாக்கி அக்கடவுளாலே சூரபத்மாவைச் சங்கரிப்பித்தும், தாரகனென்னும் அசுரனுக்கு விஷ்ணுமுதலாகிய தேவர்களெல்லாம் பயப்பட்டுப்போய்ப் பரமேசுவரன்பால் முறையிட, அப்போது காளியென்னுஞ் சத்தியைக்கொண்டு தாரகனுடலைச் சேதிப்பித்தும், திரிபுரத்தசுரர்க்குப் பயப்பட்டு விஷ்ணு முதலாகிய தேவர்களெல்லாரும் பரமேசுவரன்பால் முறையிடத் திரிபுரத்தைச் சுட்டும், சலந்தரனென்னும் அசுரன் விஷ்ணுவைத் திருப்பாற்கடலிற் பள்ளிகொள்ளவொட்டாமல் ஓட்டித் திரிய, விஷ்ணு சலந்தரனுக்குப் பயப்பட்டுப்போய்ப் பரமேசுவரன்பால் முறையிடச் சக்கரத்தாலே சலந்திரன் உடலைப்

பிணங்கும், சமுத்திர மர்த்தநத்திலே பிறந்தவிடம் பதினாலுலகத்தையுஞ்சுட, அந்த விடத்தை அமுதுசெய்தும் அன்றோ பரமேசுவரன் பிரபஞ்சத்தை இரக்ஷித்தான். உஉ

பார்த்தனார் இரதமேறிப் படைதனைப் பார்த்துச் சார்பைக், கூர்த்தஅம் பாலே எய்து கொன்றர சாளே னென்னத், தேர்த்தனி லிருந்து மாயை செய்துமால் கொல்லச் செப்பும், வார்த்தைநூ லாக்கிக் கொண்டாய் புரங்கொல் நூல் மதித்தி டாயே. உகூ௩

**(உரை)** அருச்சுனன் யுத்தஞ் செய்வதாகத் தேரிலேறி நின்று, சத்துருக்களைப் பார்த்துச் சத்துருக்களாகத் தோன்றினாரெல்லாம் என்னுடைய மித்துருக்களாக இருத்தலால் இவர்களைக் கூரிய அம்பாலே கொன்று இராச்சியஞ் செய்வதில்லையென்று சொல்ல, அவனுக்குத் தேர்ப்பாகனாகிய கிருஷ்ணன் அவன் மனந்தேறிடக் கொல்வது காரணமாகச் சர்வமும்நாமே கொல்லுவோம் நீ யன்றென்று மயங்கச் சொன்ன சொல்லையே நூலாக்கிக்கொண்டாயாயின், திரிபுரத்துள்ளார் சிவலிங்கத்தைக் கைவிடும்பொருட்டு, விஷ்ணு புத்தமுனியாக இருந்து தெய்வமொன்றில்லையென்று மயக்குவித்துச் சிவலிங்கத்தைக் கைவிடுவித்த நூலையும் நீ நூலாகக் கொள்வாயாக. உ௩

மாயைதான் உயிர்க ளாகா துயிர்கள்தாம் மாயை யாகா
மாயவன் இவைதா னாகான் இவைதானு மாய னாகா
ஏயுமாம் அநாதி யாக இறைபசு பாச மென்றே
தூயவன் கலப்பி னாலே எல்லாமாய்த் தோன்று வன்காண்.

**(உரை)** மாயையானது ஜடமாகையால் ஆன்மாக்களாகாது. ஆன்மாக்கள் இச்சா ஞானக் கிரியைகளை யுடையனவாகையால் ஜடமாகிய மாயையாகா. புருடோத்தமன் ஞானசொரூபி என்று நீ கூறுகையால், ஜடமாகிய மாயையும் சுத்தா சுத்தமாகிய ஆன்மாவுமாகி நில்லான், மாயையும் ஆன்மாவுங் கூடிப் புருடோத்தமனாகமாட்டா. மாயையாகிய பாசமும் ஆன்மாவாகிய பசுவும் இவையிற்றை நடத்துவானாகிய பதியும் அநாதியிலே பொருந்தினவாகையால், நின்மலனாகிய கர்த்தா சம்பூரணனாகையாலே சர்வமுந் தானாகித் தோன்றுவனல்லது ஜடமும் [illegible] நில்லான்.

## தமிழ்த் திருநாள்

இது திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 7-10-35-ல் நெல்லையம்பதியில் திரு. T. சங்கர நாராயணபிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் 'தமிழர் நாகரிகத் தொன்மையும் உயர்வும்' என்பதுபற்றியும், திரு. T. V. நீலகண்டம்பிள்ளையவர்கள் தமிழ் மொழியின் சிறப்பைப்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். வேறு சில அறிஞர்கள் பேசிய பின் சில தீர்மானங்களை நிறைவேற்றித் திருநாள் இனிது முடிந்தது.

---

## தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தின் 15-ம் ஆண்டு விழா

நமது சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற இச்சங்கத்தின் விழா மிகச் சிறப்பாக 4-10-35-ல் திவான்பகதூர் - P. சுப்பையா முதலியாரவர்கள் தலைமையில் நெல்லையில் நடைபெற்றது. திருவாளர்கள் முத்துக்குமாரசுவாமி பிள்ளை, சிவகுருநாத பிள்ளை, நெல்லையப்ப பிள்ளை ஆகிய மூன்றுபேரறிஞர்கள் முறையே 'பாற்கலன்மேற்பூனை', 'தமக்குரியார்', 'சைவ சமயத்தின் உயர்வு' என்பனபற்றி அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

---

## தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் 7-ம் ஆண்டு விழா

இவ்விழா 5-10-35-ல் நெல்லையில் திவான்பகதூர் P. சுப்பையா முதலியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் அருணாசலக்கவுண்டர், நீலகண்டம் பிள்ளை, கந்தசாமி முதலியார், ஆறுமுகம் பிள்ளை ஆகிய. பேரறிஞர்கள் முறையே 'தமிழிலக்கியச் சுவை', 'தமிழ்த்தொண்டு', 'திருவள்ளுவர் அறநெறி', 'தமிழ்மொழி தாழ்நிலையடையக் காரணங்களும் பேணும் முறையும்' என்பனபற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். 'சைவசமயம் உலகப் பொதுச்சமயம்', 'திருக்குறள் ஒழுக்கமுறை' என்னும் பொருள்கள்பற்றி நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதன்மை பெற்றவர்க்கு முறையே ரூ. 50-ம், 100-ம் பரிசுகளாக அளிக்கப்பட்டன.

---

## மதிப்புரை

**தேவிகாலோத்தர ஆகமம்—சித்தாந்த ரத்ந விருத்தியுரை—** உரையாசிரியர் : திரு. பொ. முத்தைய பிள்ளையவர்கள். பக்கம் 101. விலை அணா 10. தபாற்கூலி வேறு. கிடைக்குமிடம் :—சிவாகம

சங்கம், தேவகோட்டை. இந்நூல் "சிவநேசன்" பத்திரிகையில் பல இதழ்களில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு இப்போது நூல் வடிவில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. வடமொழியிலுள்ள இவ்வாகமம் இப்போது இன்னரென்று இடமாகக் கூறவியலாத ஒரு சைவப் பெரியாரால் எக்காலத்திலோ தமிழ்ச் செய்யுள் உருவில் மொழிபெயர்க்கப்பட்டது. அச்செய்யுட்களுக்குத் திருவாளர் - பொ. முத்தையபிள்ளையவர்கள் இவ்விருத்தியுரையை சைவ சித்தாந்தபரமாக எழுதி உதவியது பெரிதும் போற்றத்தக்கது. மாயாவாத பரமாக உள்ள ஒரு உரையும் இந்நூலுக்கிருத்தலின் நமது சித்தாந்தக் கொள்கைகளை விளக்கி நிலைநாட்ட இவ்வுரை மிகப்பெரிதும் வேண்டற்பாலதே. திரு. பிள்ளையவர்கள் திறமை இவ்வுரை யெங்கணும் திகழ்கின்றது. ௬௬ பாடல்களடங்கிய இவ்வாகமத்தின் உரையில் சைவசித்தாந்தக் கருத்துக்களுள் முக்கியமானவையெல்லாம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு சைவ சித்தாந்தியும் இந்நூலை உடனே வாங்குக.

---

## விலை குறைக்கப்பட்டிருக்கிறது

நமது சமாஜ அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் பத்து பிரதி வரையில் திருவாசக உரை வெளியீடு பிரதி ஒன்றுக்கு ரூபா ஒன்றரை விலை வீதம் தரப்படும். பிரதிகள் கொஞ்சமாக உள்ளபடியால் உடனே வாங்க முந்துக.

தலயாத்திரைப்படம் விளக்கத்துடன் தனிப்பிரதி விலை அணா ஒன்று; இருபது பிரதிகள் விலை ரூபா ஒன்று! கிறிஸ்ட்மஸ் விடுமுறையில் மலிவான ரிட்டர்ன் டிக்கட்டுகள் வாங்கி யாத்திரை செய்ய விரும்புவோர் இப்போதே இந்நூலை வாங்கி யாத்திரை முறையைத் திட்டம் செய்துகொள்க.

---

## சைவத் தேர்வுகள்

நமது சமாஜம் நடத்தும் சைவத் தேர்வுகள் இவ்வாண்டில் சென்னை, திருப்பாதிரிப்புலியூர், தஞ்சாவூர், திருப்பாண்டிக்கொடுமுடி, கொழும்பு ஆகிய ஐந்து இடங்களில் 17-11-35 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும்.

---

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.